# ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

அறிவியல் நகர்

கிளிநொச்சி

## கும்பாபிஷேக மலர் 2023



உ சிவமயம்







## இலங்கை கிளிநொச்சி அறிவியல் நகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

08.02.2023 புதன்கிழமை காலை 8.10 – 10.20 வரை

**மஹா கும்பாபிஷேகம்**
08.02.2023
புதன்கிழமை
உதயம் 8.10 – 10.20 மணி வரை

திருச்சிற்றம்பலம்
மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.
திருச்சிற்றம்பலம்

**எண்ணெய்க்காப்பு**
07.02.2023
செவ்வாய்க்கிழமை
காலை 8.00 முதல் மாலை 4.00 வரை

விநாயகர் அடியார்களே

சிவபூமி எனப்போற்றப்படும் இலங்கை திருநாட்டில் வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் அறிவியல் நகர் யாழ்ப்பாண பல்கலைகழக வளாகத்தில் இந்து சமயத்தவர்களின் வழிபாட்டிற்கென ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் பரிபாலன சபை முன்னெடுப்பினால் அடியவர்கள் மற்றும் அபிமானிகளுடைய பங்களிப்பினால் திட்டமிட்டப்படி புதிதாக ஸ்ரீசித்தி விநாயகர் இரண்டுதள விமானத்துடனும், அர்த்த மண்டபத்துடனும், தரிசன மண்டபத்துடனும் கூடியதாகவும், பரிவார தெய்வங்களாக தென்மேற்கில் கிழக்கு நோக்கிய மஹாலக்ஷ்மி கோவிலும், வட மேற்கில் கிழக்கு நோக்கிய வள்ளித் தெய்வானையுடன் கூடிய சுப்ரமணியர் கோவிலும், வட கிழக்கில் மேற்கு நோக்கிய வைரவர் கோவிலும், புதிதாக நிர்மானிக்கப்பட்டு பஞ்சவர்ண நிறங்கள் தீட்டப்பெற்று விளங்குகின்றது. களஞ்சியம் யாகசாலை என்பனவும் நந்தவனம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளும் நடைபெற்று ஆவர்தன கும்பாபிஷேகம் நிகழ சித்திவிநாயகரின் திருவருள் கைகூடியுள்ளது.

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் தை மாதம் 25ம் நாள் ( 08.02.2023) புதன்கிழமை, திருதியை திதியும் அமிர்தயோகமும் பூரநட்சத்திரமும் கூடிய காலை 8.10 மணிமுதல் 10.20 மணிவரையுள்ள மீனலக்கன சுப முகூர்த்த வேளையில் ஸ்ரீ சித்தி விநாயகர் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளான மஹாலக்ஷ்மி, வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்ரமணியர், வைரவர் ஆகியோருக்கும் ஆவர்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிகழத் திருவருள் கூடியுள்ளது. மேற்படி நிகழ்விலும் அதற்கு முன்னரும் தொடர்ந்தும் நடைபெறும் கிரியைகளில் பங்கு கொண்டு ஸ்ரீ சித்திவிநாயகப்பெருமானின் திருவருளைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

## கிரியாகால நிகழ்வுகள்

| | |
|---|---|
| தை 23<br>06.02.2023<br>திங்கட்கிழமை | காலை 7.30 மணிமுதல் கர்மாரம்பம், அனுக்ஞை, திரவியசுத்தி, திரவியவிபாகம், கணபதி ஹோமம், லக்ஷ்மி ஹோமம் நவக்கிரக ஹோமம், மூர்த்தி ஹோமம் சம்ஹிதா ஹோமம், சூரியாக்கினி சங்கிரகணம், நூதன மூர்த்திகள். ஜலாதி வாசம், தான்ய திவாசம், நயநோன்மீலனம், சயனாரோபனம். பகல் 1மணிமுதல் சாந்தி ஹோமம் திசாஹோமம், கிராம சாந்தி, பிரவேச பலி, ரக்ஷோக்ன ஹோமம், வாஸ்த்து சாந்தி. மாலை 04மணி முதல் ஸ்தூபி ஸ்தாபனம் தீப ஸ்தாபனம் இயந்திர ஸ்தாபனம் விம்ப ஸ்தாபனம் அஷ்டபந்தனம் மாலை 6மணி முதல் மிருத்சங்கிரகனம் முதலியன யாக பூசை (காலம் 01) |
| தை 24<br>07.02.2023<br>செவ்வாய் கிழமை | காலை 8மணி முதல் தைலாப்பியங்கம் யாக பூசை ( காலம் 02) விசேட திரவிய ஹோமம்<br>பக்தர்கள் காலை 8மணிமுதல் மாலை 04மணி வரை எண்ணை காப்பு சாத்தலாம்<br>மாலை 5மணிமுதல் யாக பூசை ( காலம் 03) விம்பசுத்தி பூர்வ பச்சிம சந்தானம் ( ஸ்பர்சாகுதி ) |
| தை 25<br>08.02.2023<br>புதன் கிழமை | காலை 6மணி முதல் யாக பூஜை ( காலம் 04) மகா பூர்ணாகுதி, அந்தர்பலி ,பகிர்பலி உபசாரங்கள்<br>சர்வமங்கள வாத்தியங்களுடன் ஸ்தூபி அபிஷேகம் ஸ்ரீ சித்தி விநாயகருக்கும் ஏனைய பரிவார மூரத்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம், தசதர்சனம், திருக்கதவு திறத்தல் எஜமானபிஷேகம் மஹாபிஷேகம் விசேட பூஜைகள் பிரசாதம் வழங்கல். |

**சர்வ போதகம்**
பிரம்மஸ்ரீ நா. சிதம்பரேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் கோவில்
இரணைமடு, கிளிநொச்சி
பிரம்மஸ்ரீ சோ. கிரிதரக் குருக்கள்
வவுனியா

**யாக சம்ரக்ஷகர்கள்**
பிரம்மஸ்ரீ இ. குபேந்திர சர்மா – யாழ்ப்பாணம்
பிரம்மஸ்ரீ உ. கிருபாகர சர்மா – யாழ்ப்பாணம்
பிரம்மஸ்ரீ . நகுலேஸ்வர சர்மா – யாழ்ப்பாணம்

**பிரதிஷ்டா பிரதம குரு**
பிரம்மஸ்ரீ சிதம்பர லக்ஷ்மி திவாகரன் குருக்கள்
பிரதமகுரு. ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் கோவில்
இரணைமடு, கிளிநொச்சி

**ஏனைய குருமார்கள்**
பிரம்மஸ்ரீ சிவகுருநாதன் குருக்கள் – வவுனியா
பிரம்மஸ்ரீ தியாக சந்திர குருக்கள் – வவுனியா
பிரம்மஸ்ரீ சண்முகநாராயணக் குருக்கள் – வவுனியா
பிரம்மஸ்ரீ குக. அரவிந்த குருக்கள – வவுனியா

**சர்வ சாதகம்**
பிரம்மஸ்ரீ நா. பிரபாகரன் குருக்கள்
வவுனியா
பிரம்மஸ்ரீ ஹரிஹர சர்மா
முன்னேஸ்வரம்

**மங்கள வாத்தியம்**
திரு எஸ்.பி. ரூபன் குழுவினர்

**மண்டலாபிஷேகம் 09.02.2023 முதல் 20.02.2023 வரை பன்னிருதினங்கள் நடைபெறும்**

அடியவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஸ்ரீ சித்திவிநாயகரின் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்வதற்கு ஒத்துழைப்பு வழங்கி திருவருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

ஸ்ரீ சித்தி விநாயகர்
அறிவியல் நகர் ,யாழ்ப்பாணம் பல்கலைகழகம்
கிளிநொச்சி
15.01.2023

ஸ்ரீ சித்தி விநாயகர்
ஆலய பரிபாலன சபை

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

# விநாயகர் துதி



வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.





அறிவியல் நகர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில், புதிய இடத்தில் புதுப் பொலிவுடன் அமையப்பெற்று கும்பாபிஷேகம் காணும் இந்நாளில் இக் கும்பாபிஷேக மலரை ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் திருவடிகளில் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம். எம்மால் இயன்றவரை பலதரப்பட்ட தகவல்களைத் திரட்டியும், அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தொகுத்தும், ஸ்ரீ சித்திவிநாயகர் அடியவர்களின் ஆக்கங்களை, இணைத்தும் இந்த மலரை எமது சமூகத்திலுள்ள பலதரப்பட்டவர்களும் வாசித்துப் பயனடையும் விதத்தில் எங்களால் முடிந்த அளவு சரி பார்த்து இதய சுத்தியுடன் வெளியிட்டிருக்கிறோம்.

*We are elated to bring out this souvenir on the grand occasion of the Maha Kumbabishekam of the Arivial Nagar Sri Sithivinayagar Temple at the University of Jaffna. A few articles presented in this book are written by Sithivinayagar devotees. The others are a collection of articles from Hindu religious professionals and leaders that have been published in various Hindu Journals.*

**ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்**
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
அறிவியல் நகர், கிளிநொச்சி.



# இதழின் உள்ளே...


***1. ஆசிச்செய்திகள்***

*1.1* ஆலய பிரதம குருக்களின் ஆசிச்செய்தி

*1.2* ஆலய அறங்காவலரின் ஆசிச்செய்தி

*1.3* துணைவேந்தரின் ஆசிச்செய்தி

*1.4* பேரவை உறுப்பினரின் ஆசிச்செய்தி

*1.5* விவசாயபீட மாணவர் ஒன்றியத்தின் வாழ்த்துச் செய்தி

*1.6* பொறியியற் பீட மாணவர் ஒன்றியத்தின் வாழ்த்துச் செய்தி

*1.7* தொழில்நுட்ப பீட மாணவர் ஒன்றியத்தின் வாழ்த்துச் செய்தி

***2. ஆலயம் பற்றிய செய்திகள்***

*2.1* வரலாறும் எழுந்தருளலும்

*2.2* கும்பாபிஷேக கிரியை விளக்கம்

*2.3* ஆலயத்தின் கடந்தகால நிகழ்வுகள்

*2.4* ஆலய உருவாக்கத்தின் மைல்கற்கள்

***3. வழிபாட்டு முறைகள்***

*3.1* ஆலய வழிபாடு

*3.2* இந்துமதமும் விநாயகர் வழிபாடும்

*3.3* மண்டலாபிஷேகம் அதற்கு அங்கமான சங்காபிஷேக மகத்துவம்

*3.4* பண்டிகைகளும் விரதங்களும் எப்படி தீர்மானிக்கப்படுகின்றன

***4. ஏனைய செய்திக்குறிப்புகள்***

*4.1* கோவிலுக்கு பழங்கள் வழங்கப்படுவது ஏன்?

*4.2* கோவிலில் தேங்காய் உடைப்பது ஏன்?

***5. ஆலய கணக்கறிக்கை***

*Temples have always played a central role in our society.*

*Apart from being focal points of education, art and culture, they also served as powerful energy centers. Ancient temples were thus built not as places for prayer, but as a vortex of energy where, if people were receptive and willing, they could transform themselves in a very deep way.*

*The design and construction of these temples was fairly intricate, they were built according to a complex calculation involving physical and metaphysical elements. The parikrama(walkway into the temple), the garbha griha (the sanctum sanctorum), the shape and the size of the idol, the mudra held by the idol and the mantra used for the consecration of the temple, were all determined by the fundamental parameters of the design.*

*Based upon a deep understanding of the inner energies of the human system, these elements were built in order to create a powerful space for inner transformation. For example, it is held even today in some parts of Indian culture that when one visits a temple one should sit silently for a little while. Offering worship or prayers are not considered paramount but, if one were to leave the temple without sitting down for some time, the entire visit is considered fruitless.*

*This is so, because temples were built as public charging sites, where people could charge themselves with an inner energy. People visited temples daily before they started their day, so that they could go about their lives with an enhanced sense of balance and depth.*

***Official Website of Sadhguru, Isha Foundation | India***

நமது சமூகங்களில், கோவில்கள் எப்பொழுதுமே ஒரு முக்கிய பங்கை வகித்திருக்கின்றன.

கல்வி, கலை மற்றும் கலாச்சார குவிப்பு மையங்களாக மட்டுமல்லாமல் மிகவும் சக்தி வாய்ந்த மையங்களாக செயல்பட்டுள்ளன. புராதனக் கோவில்கள் வழிபாட்டுக்காக அல்லாமல் சக்தியின் கருவறையாகவே அமைக்கப்பட்டன. இந்த கோவில்களின் வடிவமைப்பும் கட்டுமானமும் மிகவும் நுணுக்கமாகவும் சிக்கலான கணக்குகளுடனும் கட்டப்பட்டுள்ளன. இந்த கோவில்களின் அடிப்படை வடிவமைப்பானது, கோவில் பரிக்ரமா, கோவிலின் கர்ப்பக்கிருகம், கடவுளின் உருவச்சிலையில் உள்ள முத்ரா, பிரதிஷ்டைக்காக பயன்படுத்தப்பட்ட மந்திரங்கள் இவையனைத்தையும் பொறுத்து அமைகிறது.

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் உள்ள உள்சக்திகளின் ஆழமான புரிந்து கொள்ளுதலை அடிப்படையாகக் கொண்டு, உள்நிலை மாற்றத்திற்கு உபயோகப்படும் மிகவும் சக்தி வாய்ந்த இடமாக, இந்த கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு, தற்பொழுது கூட இந்திய கலாச்சாரங்களில் கோவிலுக்குள் சென்றால், சிறிதளவு நேரமாவது அமைதியாக உட்கார்ந்து விட்டு செல்வது என்பது வழக்கமாக உள்ளது.

வழிபாடுகளும், பிரார்த்தனைகளும் கூட அவ்வளவு முக்கியமாக கருதப்படவில்லை. ஆனால் ஒருவர் சிறிது நேரமாவது கோயிலுக்குள் உட்காராமல் போய்விட்டால் அது பலனற்றதாக கருதப்பட்டது. இது எதற்காக என்றால், கோயில்கள் எல்லாம் சக்தியை நிரப்பிக் கொள்ளும் இடங்களாகக் கட்டப்பட்டுள்ளன. அவ்வப்போது மக்கள் இங்கு வந்து தங்கள் உள்சக்தி நிலையை பெருக்கிக் கொள்ளலாம். மக்கள் தினமும் காலையில் தங்கள் வேலைகளை ஆரம்பிக்கும் முன் கோயிலுக்குச் செல்வார்கள். இதனால் தங்கள் வாழ்க்கையை அதிக சமநிலையுடனும், ஆழத்துடனும் அவர்கள் எதிர்கொள்ள முடியும்.

***Official Website of Sadhguru, Isha Foundation | India***

# 1
# ஆசிச்செய்திகள்





உ


கணபதி துணை

**ஸ்ரீ சிதம்பரலக்ஷ்மி திவாகரக்குருக்கள்**

அகில இலங்கை சமாதான நீதவான் - பதிவு இல: 17-10-வமா-தீமு-294

**Rev.S.Thivakarakurukkal**

Justice of Peace (Whole Island) Regd. No: 17-10-NP-WI-294



Date: 2023.02.16

## பிரதம குருக்களின் வாழ்த்துச் செய்தி



நீர்வளமும், நிலவளமும், கனிவளமும் அமையப்பெற்ற கிளிநொச்சி மண்ணில் கல்வி வளம் அமையப்பெற்ற மிகப்பெரிய அடையாளம் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகம் அமைந்திருக்கும் இடத்தில் இன, மத, மொழி வேறுபாடு இன்றி எல்லா வகையான மாணவர்களும் கல்வி பயின்று அவரவர் வணக்கத்துக்குரிய ஆலயங்களை நிர்மாணித்திருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் சிறந்த சிற்ப வேலைகளோடு அழகு நிறைந்த வர்ணக் களைகளோடு இரண்டு தள கோபுரமும், அழகு மிளிர அம்பாள், முருகன், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கான தனி சந்நிதானமும் அமையப்பெற்று ஆவர்த்தன கும்பாபிஷேகம் (08-02-2023) புதன் கிழமை இடம்பெற்றிருக்கின்றது.

அனைத்து கலை அம்சங்களைக் கொண்டு இந்திய, இலங்கை சிற்பாசாரியர்களின் கைவண்ணத்தோடு அமையப்பெற்றிருக்கும் கிளிநொச்சி வளாக ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் குடமுழுக்கு இனிதே நிறைவு கண்டிருக்கிறது.

ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் திருவருள் மண்ணில் நல்லவண்ணம் வாழ்கின்ற சகல விதமான உயிர்களுக்கும் கிடைக்க நிறைந்த ஆசிகளையும், அன்பினையும், வாழ்த்துக்களையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

சி. திவாகரக்குருக்கள்
16/02/2023.

ஸ்ரீ விநாயகர் தேவஸ்தானம். குருமன்காடு. வவுனியா. இலங்கை.

Sri Vinayagar Thevasthanam, Kurumankadu, Vavuniya, Sri Lanka.

FACULTY OF HINDU STUDIES
UNIVERSITY OF JAFFNA

# ஆசியுரை



*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல் நகர், கிளிநொச்சி ஆன்மீக நிலைய இந்து சமூகத்தவர்களுக்கான அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் 08.02.2023 அன்று ஆவர்த்தன மஹாகும்பாபிஷேகம் நிகழ்வதையிட்டு நல்லாசிகளை வழங்குவதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையின் 448வது அமர்வின் (01.11.2020) அனுமதியின் பிரகாரம் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாம் சமூகத்தவர்களுக்காக தலா ஒவ்வொரு ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டது. அதில் இந்து சமூகத்தவர்களுக்காக அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் அதற்குரிய ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபை, அமைப்பு திட்ட விதிகளும் பிரமாணங்களும் அனுமதிக்கப்பட்டமைக்கு அமைவாக 15.12.2019 அன்று துணைவேந்தரால் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமான பணிகள் ஆரம்பமாகின.*

*இந்து சமூகத்தவர்களது ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் துரிதகதியில் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு இலங்கை, இந்திய ஸ்தபதிகள் அரும்பணியாற்றினர். இதற்குரிய நிதி வளத்தினை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்துவரும் அபிமானிகள் மனமுவந்து அன்பளிப்பு செய்தனர். இவர்கள் யாவரினதும் பங்களிப்பின் பயனாக மஹாலஷ்மி, சுப்ரமணியர், வைரவர் ஆகியோருக்கான தனித்தனி சந்நிதானங்கள் பரிவாரமாக அமைய ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் இரண்டு தள விமானத்துடன் கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், தர்ஷனமண்டபம் ஆகியவற்றுடன் கட்டுமான பணிகள் நிறைவு பெற்றன. அத்துடன் மடப்பள்ளி, களஞ்சியம் ஆகியனவும் அமையப்பெற்றன.*

*சிவாகமங்களது விதிப்படி, மனிதர்களாக பிறந்த பிறவியின் பயனாக ஆலயம் அமைப்பது அனந்த கோடி பலனை அளிப்பதாகும். அத்துடன் ஆலயம் அமைக்கும் பணியில் ஒன்றிணைபவரது இருபத்தொரு சந்ததியினர் மேன்மையடையும் சிறப்புடையது. அத்தகைய பலன்களை திருக்கோவில் அமைக்கும் வேளையில் உடலாலும், பொருளாலும், உள்ளத்தாலும் சேவையாற்றிய அனைவருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகரது திருவருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.*

*ஸ்ரீ சித்திவிநாயகரது திருவருட்பொலிவு மேன்மை பெற தொடர்ச்சியாக அனைவரது சேவைகளும் இஹபர சுகங்களை தரவல்லது.*

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"*

S. Padmi
06/02/2023
பீடாதிபதி,
இந்துக் கற்கைகள் பீடம்.

Dean
Faculty of Hindu Studies
University of Jaffna
Sri Lanka

General: 021 221 2396
Intercom: 2221
arhindu@univ.jfn.ac.lk

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

மெய்ப்பொருள் காண்பது அறிவு

***Professor. S. Srisatkunarajah***
***Vice Chancellor***
*B.Sc(Hons) Jaffna, PGDE(Merit) OUSL, Ph.D Heriot-Watt,*
*Professor in Mathematics*


எமது இல. / මගේ අංකය / **My Number**

உமது இல. / ඔබේ අංකය / **Your Number**

**Date :** 17.02.2023

## துணைவேந்தரின் ஆசிச் செய்தி

கிளிநொச்சி, அறிவியல் நகரிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் பெருங்கருணைத் திறத்தினைப் பற்றி பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேக மலரில் அருள் பரப்பும் செய்தி வரையக் கிடைத்தமை எம் பெருமானின் மகிமையே.

மூவரும், தேவரும் போற்றும் தனிப் பெருந்தெய்வம் விநாயகப் பெருமான். ஓங்கார வடிவமுடையவர். போற்றுபவர் துயர் போக்கும் கடவுள். அடியவர்களுக்கு எளிதில் அருள்புரியும் கருணைக்கடல். இடர்களைப் போக்கி வழிகாட்டுபவர் என்பதால் விக்னேஸ்வரன் என்று பெயர் பெற்றார். புவனங்களையெல்லாம் காத்தரும் விநாயகப் பெருமான் கணங்களுக்கெல்லாம் தலைவனாகத் திகழ்பவர். அடியார் தம் விக்கினங்களைத் தீர்த்தரும் விக்னேசுரனாகவும், வேண்டியவர்கள், வேண்டியவற்றை, வேண்டியபடி இஷ்ட சித்திகளை அளிக்கவும் – அருளவும் ஆற்றல் பெற்றவர். அதனாலேயே அவர் சித்தி விநாயகனாகவும் விளங்குகிறார். உள்ளன்போடும், பவித்திரமான பக்தி, சிரத்தையுடனும் மனமுருகி அழைத்தால், அனைத்து உலகங்களையும் ஆளும் சர்வலோக நாயகனாக விநாயகப் பெருமான் விரைந்தோடி வந்து வினைகளைக் களைந்தருள்வார்.

கிளிநொச்சி, அறிவியல் நகரிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் எல்லோரும் தத்தம் சமயங்களைப் பின்பற்றும் சிறப்பைக் கொண்ட சமய வழிபாட்டு வலயத்தினுள், விநாயகப் பெருமானுக்குக் கோவில் அமைத்துக் கும்பாபிஷேகம் இடம்பெறுகிறது. மிகவும் சிறப்பாக இக் கைங்கரியம் கைகூடியிருப்பதுவும் விநாயகப் பெருமானின் பெருங்கருணை என்றே சொல்லாம்.

சித்தி விநாயகப் பெருமானின் குட முழுக்கு நன்நாளில் எல்லாம் வல்ல ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கிறேன். .

**பேராசிரியர் சிறிசற்குணராஜா**
துணைவேந்தர்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

Prof.S.Srisatkunarajah
B.Sc(Hons) Jaffna, PGDE(Merit) OUSL
Ph.D Heriot - Watt
Professor in Mathematics
Vice Chancellor
University of Jaffna


த.பெ. எண் 57. திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
තැ.පෙ. අංකය 57, තිරුනෙල්වේලි,යාපනය.
**P.O. Box 57, Thirunelvely, Jaffna.**

Telephone : +94 212 222 294
+94 212 222 006
Fax : +94 212 222 294

E-mail : vc-office@univ.jfn.ac.lk
Website : www.jfn.ac.lk

# SIVAPOOMI TRUST
# சிவபூமி அறக்கட்டளை

**Head Office :** Sivapoomi Trust, Kondavil East, Kondavil, Jaffna , Sri Lanka
**T.P.No :** 021-222-7938 Web - www.sivapoomi.org/.com E.Mail - sivapoomi@gmail.com

Incorporated by an order made under section 114 of the trusts Ordinance by the Minister of Justice and Gazetted in Gazette Extraordinary No 1685/26 dated 24.12.2010



**Board of Directors**

**President**
Dr.Aru Thirumurugan
Rtd.Principal
Skandavaroodaya College
Chunnakam.

**Vice President**
Mrs.K.Kugathasan
Principal
Sivapoomi School,
Kondavil.

**Secretary**
Mr.P.Srivigneswaran
Rtd.Divisional Director
of Education

Mr.N.Sathasivaiyer
Rtd.Additional Registrar
General

**Asst.Secretary**
Mr.M.Thayaharan
Manager
H.N.B Bank

**Treasurer**
Dr.S.Kamalakumar
**Jaffna**

**Patron**
Rishi Thondunathan Swami


**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்**

Date : ......................

## செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்கள் இயங்குகின்ற கிளிநொச்சி அறிவியல் நகரில் பல்கலைக்கழக சமூகத்தால் அமைக்கப்பட்ட விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகிறேன். அறிவியல் நகரில் ஞான முதல்வனுக்கு திருக்கோவில் கட்டப்பட்டுள்ளது. பல்கலைக்கழக கல்விமான்கள் மாணவர்கள் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது. துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா அவர்களின் ஊக்குவிப்பில் இத்திருக்கோவில் விரைவாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் வெளியூர் அன்பர்கள் வழங்கிய உதவியில் அற்புதமான திருப்பணி நிறைவு பெற்றுள்ளது. சைவ மாணவர்கள் வழிபாடு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் நிரந்தரமாக கோயில் எழுந்துள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் தினமும் ஒழுங்காக பூசை வழிபாடுகள் நன்முறையில் நடைபெறவேண்டும். பல்கலைக்கழக சமூகம் அதற்கான நியம ஒழுங்குகளை எதிர்காலத்தில் பேணவேண்டும். வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனைகளை நடாத்தி மாணவர்களின் மன அமைதியை பேணவேண்டும். பேராதனையில் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை காலந்தவறாது சிறப்பாக வழிநடத்துவது போல் அறிவியல் நகர் விநாயகப் பெருமான் கோவில் எதிர்காலத்தில் பிரகாசிக்க வேண்டும். இவ்வாலயத் திருப்பணியில் அயராது உழைத்த அனைவருக்கும் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் மீளவும் சமர்ப்பித்து அமைகிறேன்.

செஞ்சொற்செல்வர் **கலாநிதி ஆறுதிருமுருகன்**

தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை,
உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்,
பேரவை உறுப்பினர், யாழ் பல்கலைக்கழகம்.

# AGRICULTURE STUDENTS' UNION
# விவசாயபீட மாணவர் ஒன்றியம்

விவசாய பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
அறிவியல் நகர்,
கிளிநொச்சி.

**Faculty of Agriculture**
**T.P:** + 94 21 222 2973
**Fax:** +94 21 222 2973
agsu.jfn.uni@gmail.com

Faculty of Agriculture,
University of Jaffna,
Ariviyal nagar,
Kilinochchi.



**Patron**
Dr.S.Vasantharuba
Dean
Faculty of Agriculture

**Student Counsellors**
Dr.N.Kannan
Mrs.K.Kajeevan
Mrs.T.Asharp

**Senior Treasurer**
Dr.N.Kannan
aenkanna@gmail.com
0776511553

**President**
Mr.R.Balamauran
Balamauran68@gmail.com
0771021138

**Vice President**
Mr.V.Thilakson
thilakshanvaratharajan@gmail.com
0757948860

**Secretary**
Mr.Nirojan.A
jan.29jan95@gmail.com
0764646974

**Assistant Secretary**
Mr.Logaseelan.N
Logaseelan2018@gmail.com
0773185592

**Junior Treasurer**
Mr.S.Kalaianushan

**Editor**
Miss.S.Vaithegi

**Committee Members**
Mr.W. Akash Madubashana
Miss.T.Bawadharani

**Student Representatives**
Mr.J.M.A Javeed
Miss.K.M.S.M.S.Thamel


**Message from the Agriculture Students' Union President,**

I am grateful for the chance to share a few words on this auspicious occasion of the Kumbhabhishekam ceremony of the newly constructed Sri Siddhi Vinayaka Temple at University of Jaffna, Ariviyal Nagar designed in accordance with Hindu Sastric and Agamic standards.

Our quest to build a traditional Hindu temple comes to a close with this event. Due entirely to the Divine Blessings and Grace of our Beloved Ishta Deva Lord Ganesha and the unwavering support, love, and dedication of the devotees, we have been able to achieve this sought goal. For the community of university students, it is a crucial day. The building project required devoted effort, hard work, specialized professional abilities, and self-assurance needed to successfully meet challenges.

The temple management committee, as well as individuals working on the aforementioned duties and other equally important ones, deserve credit for this accomplishment. Importantly, I want to express my gratitude for the assistance and suggestions provided by numerous donors and supporters in the building of the temple. I wish to congratulate Mr.B.Kiriparan, Prof.A.Atputharaja and Dr.S. Vasantharuba in particular for their effort to making this enormous accomplishment possible.

Building a temple has become necessary for us as a community because of the knowledge we have gained from the past four years of temple worship. This temple will allow us to identify and define who we are as a group and to celebrate our religious beliefs and traditions with fervor and spirituality. Also, this event has energised the entire temple crew, including the priests and managers.

Together with the other worshippers at the temple, I pray to Lord Ganesha for His Divine Grace and Blessings on us all as well as the Management Committee, who worked tirelessly to build and dedicate this magnificent temple. Inspire us and serve as a beacon of light for our neighbourhood forever.

Mr. R. Balamauran,
President of Agriculture Students' Union,
University of Jaffna.



# Engineering Students' Union
# Faculty of Engineering
# University of Jaffna - Sri Lanka


**Patron:**
Dr.K.Pirapaharan
Dean
Faculty of Engineering

**Email:** esu@eng.jfn.ac.lk

**Senior Treasurer:**
Dr.A.Anburuvel
Senior Lecturer
Department of Civil Engineering
Faculty of Engineering


**Executive Committee 2022/2023**

**President**
Mr.A.Thirukkumaran

**Secretary**
Mr.B.M.G.P.Balasuriya

**Vice President**
Mr.S.G.P.H.Sudasingha

**Ass. Secretary**
Mr.S.Senthooran

**Junior Treasurer**
Ms.J.Thajani

**Editor**
Mr.R.P.N.P.Ruwanpathirana

**Committee Members**
Ms.S.V.Vinusha
Mr.S.Thushaharan
Mr.N.M.A.C.Navarathna
Mr.J.A.Udeshkar
Mr.W.M.R.D.Wickramasinghe

Message from the Engineering Students' Union President,

I am thankful for the opportunity to write a few words on this sacred occasion of the Kumbhabhishekam ceremony of the newly constructed Sri Siddhi Vinayaka Temple built according to Hindu Sastric and Agamic requirements at University of Jaffna, Ariviyal Nagar, Kilinochchi.

This ceremony marks the final phase of our journey towards establishing a traditional Hindu temple. We have been able to accomplish this coveted goal, primarily due to the Divine Blessings and Grace of our Beloved Ishta Deva Lord Ganesha and the unstinted support, love and dedication of the devotees. It is a day of momentous importance for the university students' community. The construction work called for dedicated application, hard work, special professional skills (including knowledge of temple design and architecture) and the self-confidence needed to successfully meet challenges.

The credit for this achievement goes to the temple Management Committee and those involved in the above tasks and the other equally vital tasks. Importantly, I want to thank and show my gratitude for the contribution and advice of various donors and devotees in the construction of the temple. Especially i want to thank Mr B.Kiriparan, Prof.A.Atputharaja, Dr K.Pirabaharan for their dedication to making this huge achievement come true.

The experience gained over the past 4 years in temple worship has made us necessary to build a temple where we as a community are able to recognize and define ourselves and celebrate our religious beliefs and traditions with intensity and spirituality. Furthermore, this experience has energized the whole temple team - temple priests, the temple management committee, the dedicated team of volunteers and the worshippers and served as an invaluable training ground for the work ahead of building a well-knit dynamic team for future work in the newly constructed temple.

I join the worshippers in the temple in offering our prayers to Lord Ganesha for His Divine Grace and Blessings on all of us and the Management Committee who have given their utmost for the construction and consecration of this glorious temple. May the Temple inspire us and shine as a beacon light for our community for all time to come.

Amirthalingam Thirukkumaran
President of Engineering Students' Union
University of Jaffna

A.Thirukkumaran
President
Engineering Students' Union
University of Jaffna

# Technology Students Union
# University of Jaffna

Patron
Prof. (Dr./Mrs.)
S.Sivachandran
Dean

Email:
fot_tsu@tech.jfn.ac.lk
Facebook Page:
technology students union- Jaffna

Senior Treasurer
Mr. S.Gowthaman
Senior lecturer Gr.II
Faculty of Technology

**President**
I.W.B.Wickramage
(0778589939)

**Vice President**
M. Ann Premiya

**Secretary**
S.Sharukanth
(0773764273)

**Assistant Secretary**
G.I.Ranaweera

**Editor**
A.Insaf ahamed

**Junior Treasurer**
P.G.D.I Madusanka

**Members**
Dilaxshi.S
Chaarujee.S
D.M.S.Perera
W.M.N.Tharushi
Y.H.S.Madhusanka
Amani A.R.A.A
Bandara G.K.G.S.H
Minthusan.S


14/02/2023

Message from the Technology Students' Union Secretary,

From Aarumuganavalar's point of view, "It is better to repair and maintain old ones than build new temples." As secretary of the student union of the technology faculty at our Kilinochchi premises of the University of Jaffna, I am pleased to present the congratulatory speech for the book, which was published at the Maha Kumbabhisheka festival of Sri Siddhi Vinayagar Temple. Now our auspicious Siddhi Vinayagar temple has been constructed and will be used for devotions after the Kumpabisheka festival on 8$^{th}$ of February 2023. It was built at our Kilinochchi University after a long struggle due to everyone's perseverance. In the future, we expect that this activity should be continued by all our university students and that our rituals should be followed continuously, with our best wishes for their implementation.

Best regards,
S.Sharukanth
Secretary of Technology Students' Union,
University of Jaffna.

# 2
# ஆலயம் பற்றிய செய்திகள்



# யாழ்பல்கலை அறிவியல் நகர் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான்: வரலாறும் எழுந்தருளலும்

**கு.மிகுந்தன்**

*சிரேஷ்ட விவசாய உயிரியல் துறை பேராசிரியர்*
*விவசாய பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.*

*யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களும் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த காரணத்தினால் பல்கலைக்கழகத்தின் வன்னி நிலப்பரப்பினை நோக்கிய அபிவிருத்தியை அடியொட்டி கிளிநொச்சியை மையப்படுத்தி விவசாய பீடமும் பொறியியல் பீடமும் ஆரம்பத்தில் உருவாக்க திட்டமிடப்பட்டிருந்தன. வடமாகாணத்தின் நடுமையமாக கிளிநொச்சி அமைந்திருந்ததனால் அப்போதிருந்த பல்கலைப் பேரவையில் யாழ்ப்பாணத்திற்கு வெளியிலான வடமாகாணத்தின் அனைத்துப் பகுதிகளையும் அபிவிருத்தி செய்யும் நோக்கிலான முன்மொழிவினூடாக இவ்விரு பீடங்களையும் உருவாக்கும் ஆரம்பப்புள்ளி குறித்து வைக்கப்பட்டது. பொறியியில் பீடத்தை உருவாக்கும் முயற்சியில் பலர் தங்களது பங்களிப்பை செலுத்தியிருந்தும் இதற்காக பொறியியலாளர் ஒருவர் ஒருங்கிணைப்பாளராக இணைக்கப்பட்ட பின்னும்கூட இலங்கையின் முன்னணி பொறியியலாளரும் இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவுமிருந்த அமரர் பேராசிரியர் துரைராசா அவர்களால் 03.12.1990ம் திகதி ஊரடங்கிய வேளையில் முதன்முதலாக விவசாய பீடத்தை இரணைமடு சந்தியிலமைந்துள்ள மாகாண ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் அப்போதய பணிப்பாளராயிருந்தவரும் பேரவை உறுப்பினருமான அமரர் கலாநிதி விவேகானந்தன் அவர்களால் மனமுவந்து பீடத்திற்காக தரப்பட்ட கட்டடத்தில் ஆரம்பிக்கவே யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் லேடி லீலாவதி இராமநாதன் அம்மையாரால் உருவாக்கப்பட்ட ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பரமேஸ்வரப்பெருமான் அனுக்கிரகம் கிடைத்தது. சிவப்பிரம்மத்தின் அருளாட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து அறிவியல் நகரையும் உள்ளடக்கியிருக்கின்றது. எத்துணை மகிழ்ச்சி, எமக்கெல்லாம் கிடைத்த அருட்கடாட்சம், துணிவு, துயரத்திலும் துவண்டுவிடாது தன்னம்பிக்கையை தமது தும்பிக்கையால் காட்சிதந்தருளும் இறையை எமக்குள்ளே உருவகித்த அருளாளரை ஆலயமாக்கியிருக்கும் சிறப்பு எம்எல்லோருக்கும் கிடைத்த வரம்.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓரங்கமான அறிவியல் நகரில் உள்ள கிளிநொச்சி வளாகத்தில் அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகப்பெருமான் 08.02.2023 இல் கும்பாபிஷேகத்துடன் பிரமாண்டமாக எழுந்தருளி அனைவருக்கும் அருள்பாலிக்கின்றார். கல்விப்புலம் சார்ந்த அனைத்து பல்கலைக்கழக சமூகத்தினதும் நல்லாசி வேண்டி அனைவரதும் பங்களிப்பினால் உருவாகியிருக்கும் அழகிய ஆலயத்தை ஒப்பேற்றியிருப்பதும் நின்று நிமிர்ந்து கண்கொள்ளா காட்சிதந்திருக்கும் வரம் கிடைத்திருப்பதும் அனைவருக்கும் திருப்தியையும் மனநிம்மதியையும் தந்திருக்கின்றது. நமது ஆன்மா மகிழ்ந்திருக்கும் இவ்வேளையில் இது பற்றிய வரலாறு ஆவணப்படுத்தல் வேண்டும் என்னும் கோரிக்கையை பொறியியல் பீடத்து கலாநிதி கதிர்காமநாதன் அவர்கள் விடுத்த போது முதலில் சற்று தயங்கினாலும் இறைபணியாக அவர் உருக்கொண்டதை உள்ளதை உணர்ந்ததை ஆதிமொழியில் எழுத்துருக்கொடுக்க வேண்டும் என இறைவன் பணித்ததை மனமார ஏற்று இதனை எழுத முற்பட்டிருக்கின்றேன். எம்பெருமானின் நல்லாசியுடன் கிளிநொச்சியில் விவசாய பீடம் ஆரம்பித்த 3.10.1990ம் நாளிலிருந்து 33 வருடங்களாக பணிபுரிய கிடைத்த பெருமையுடன் இக்காலத்தில் எல்லோருக்கும் சித்தி தந்து உயர்வடைய வைத்து உவகை கொண்டு ஆனந்தமாக பள்ளி கொண்டிருக்கும் எம்பெருமான் எழுந்தருளிய வரலாற்றை அந்த பிரமாண்டத்தை சுருக்கியிருக்கின்றேன்.*

*எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும். எமது அனைத்து செயற்பாட்டுக்கும் ஆரம்பத்தை ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமானிலிருந்து அவர்தம் அருளாசியிலிருந்தே ஆரம்பிக்கின்றோம். அனைத்திற்கும் சுழிபோட்டு ஆரம்பித்தவர் தாமமர்ந்து அருள்பாலிக்க அழகிய ஆலயத்தை அமைக்கச் செய்து ஆலயத்து அருளொலி இசைத்து அனைவருக்கும் காட்சிதரும் இடத்தில் எழுந்தருளியிருக்கின்றார். இதற்கொரு வரலாறு உண்டு. எம்பெருமான் பள்ளிகொண்ட சிறிய ஆலயத்தின் உருவாக்கத்தோடு தொடர்புபட்டதால் என்னை தெரிவுசெய்து எனக்கறிவித்து எடுத்துரை என்று பணித்ததை சிரமேற்கொண்டு என்சிற்றறிவுக்கு எட்டியவரை தொகுத்தெடுத்து எழுதியிருக்கின்றேன். இதை எழுதும் போது எனக்குள்ளே 1991ம் ஆண்டு ஏ9 வீதிக்கருகில் அருட்கொண்ட அந்த மூலிகை தோட்டத்து விநாயப்பெருமானை நினைவில் கொண்டு எழுதவே மனம் உந்துதலானது. ஆதலால் தற்போது அமைந்திருக்கும் ஆலயத்தை சுற்றி வடமாகாணத்து அனைத்து மூலிகைத் தாவரங்களையும் வளர்த்து பூக்களால் சோலையாக்கி அவர்தம் திருப்பணியை நிறைவேற்ற வேண்டும்;.*

*விவசாய பீடம் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு வணங்குவதற்காக சுற்றிவர பல ஆலயங்களிருந்தும் ஏ9 பாதையில் விவசாய உயிரியல் துறையினால் தற்போதிருக்கும் IOM இடத்தில் இறைவனின் கருணையினால் அழகான மூலிகைத் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பல்வகைத் தாவரங்களை உள்ளடக்கியிருந்த அந்த மூலிகைத் தோட்டத்தின் மேற்கு மூலையில் ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான் எழுந்தருளியிருந்தார். அப்பகுதி மக்களின் விருப்பத்தில் அங்கு எழுந்தருளியிருந்த எம்பெருமானுக்கு மூலிகைப் பிள்ளையார் என நாமமிட்டு நாமும் வணங்கிவந்தோம். பீடம் யாழ்ப்பாணத்திற்கு தற்காலிகமாக நகர்த்தப்பட்ட போது மூலிகைத் தோட்ட நிலத்தை IOM என்னும் நிறுவனம் கையேற்ற போது தமது பகுதியை வேலியமைத்து வரையறைசெய்ய மூலிகைப் பிள்ளையாருக்கு அப்பகுதி மக்கள் வணங்குவதற்காக அழகான சிறுஆலயம் அமைத்து தற்போது*

சிறந்து எழுந்தருளியிருக்கின்றார். மூலிகைத் தோட்டத்தில் வளர்த்த அக்கேசியா மாஞ்சியம் என்னும் பிறநாட்டு மரங்கள் அனைத்தும் போரில் எறிகணைக்குள் அழிந்தொழிய இரு மரங்களை இன்னமும் அங்கே அடையாளத்திற்காக விட்டு வைத்திருக்கின்றனர்.

போரின் உக்கிரத்தில் 2016 இல் பீடம் கரிப்பட்ட முறிப்புக்கு நகர்ந்து பின்னர் அனைத்தையும் இழந்து யாழ்ப்பாணத்தில் மருத்துவபீடத்தின் விருந்தினர் விடுதியிலும் தனியார் வீடுகளிலும் தஞ்சம் புகுந்தது. ஏறக்குறைய 17 ஆண்டுகள் அங்கிருந்து அல்லல் பட்டு பின்னர் அறிவியல் நகருக்கு 2013 இல் எம்மைக் கருவியாக்கி பீடத்தின் பீடாதிபதியாக்கி விவசாய பீடத்தை அறிவியல் நகருக்கு இறைவனே நகர்த்தினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகம் அறிவியல் நகரில் அமைந்திருக்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் நகரத்தின் அபிவிருத்தியினை குறித்து நகர்ப்புற அபிவிருத்தி ஆணையத்தினால் (Urban Development Agency-UDA) வரையறுக்கப்பட்ட திட்டத்தின் படி மேற்படி கிளிநொச்சி வளாகம் அறிவுக்கான தளமாக கருதப்பட்டு கல்விசார் நடவடிக்கைக்காக கட்டப்பட்ட கட்டடங்களில் விவசாய பீடத்தின் உள்வருகையுடன் ஆரம்பிக்கப்பட்டது.

அன்றிலிருந்து கிளிநொச்சி வளாகத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை செய்வதற்கு பல்கலைக்கழக நகர்ப்புற திட்ட குழுவின் தலைவராக மீண்டும் அமர்த்தி அதில் வணக்கத்துக்குரிய தலங்கள் நான்கையும் ஒன்றாக பேதமின்றி ஓரிடத்தில் உருவாக்க வேண்டுமென்ற விருப்பினை எம்பெருமான் இறைவனே எமக்குள் உருவாக்கி அதனை பூர்த்தி செய்யும் வாய்ப்பையும் கொடுத்திருக்கின்றார். முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணத்துடன் ஆலய திருப்பணியில் முக்கிய பங்களித்த அறிவியல்நகர் வளாகத்தின் அபிவிருத்தியில் பல அற்புதங்களை செய்த அன்றைய பொறியியல் பீடாதிபதியும் பேராசிரியருமான அற்புதராசாவை அவசியம் நினைவில் வைத்தல் தகும். விநாயகப்பெருமானின் கருவியாகவே அற்புதராசா செயற்பட்டார் என்பதனை அனைவரும் அறிந்திருப்பர்.

புலம்பெயர்ந்த பல உறவுகள் எம்பெருமானின் ஆலயதிருப்பணியுடன் தம்மை இணைத்துக் கொண்டிருக்கின்றனர். நிதி வளம் இன்றி எதுவும் நடவாது என்னும்போது இறைதிருப்பணியின் அவசியம் உணர்ந்து அவரவர் பங்களிப்பை மனமுவந்து செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எம்பெருமான் இறைவனின்அருட்கடாட்சம்நிச்சயம்கிடைக்கும். அதேபோல அறிவியல்நகரில்உள்ளஅனைத்து பீடங்களிலும் கல்விகற்கும் மாணவ மாணவியர்கள் பலருக்கு நிதிப்பிரச்சனை இருப்பதனை அறிந்திருக்கின்றோம். ஒருவேளை உணவின்றி அதற்கு பணமின்றி கல்விகற்கும் காலங்களும் இருப்பதாக மாணவர்கள் கூறக்கேட்டு இறையோடு இருக்கும் அனைவரும் துன்பப்படுகின்றோம். ஆதலினால் இறைவனின் திருப்பெயரில் நிதியமொன்று உருவாக்கி நிதிசார்ந்த பிரச்சனைகளுக்கும் தீர்வு காண எம்பெருமானின் அன்பர்கள் முயற்சி செய்ய வேண்டும் என்னும் பதிவையும் இதில் இட்டுவைக்கின்றேன்.

முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் விக்கினேஸ்வரன் காலத்தில் இவ்வாலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டி நாளாகி வருடங்களுமாகி பல்வேறு இடர்களுக்கு மத்தியில் ஆலயப்பணி நிறைவடைந்திருக்கின்றது. எம்பெருமானின் இவ்வாலய இருப்புக்கு பலர் முன்னின்று உழைத்திருக்கின்றனர். அதில் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக இருந்த தற்போதும் இருக்கின்ற கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களின் பங்களிப்பும் அளப்பரியது. இவ்வாலயத் திருப்பணியில் ஆரம்பித்தும் தாமதமாகினாலும் இந்துகற்கைகள் பீடத்தின் பீடாதிபதி பத்மநாதன் ஐயா அவர்களின் காலத்தில் அவர்கொண்ட சிரத்தையின் பலனாக இவ்வாலயத்தின் அருட்கடாட்சம் தற்போது கிடைத்திருக்கின்றது. தற்போதய துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராசாவின் மேற்பார்வையில் நடைபெற்ற திருப்பணியாகியதால் அவருடனிணைந்த அத்துணை திருப்பணி உறுப்பினர்களுக்கும் எம்பெருமான் அருட்கடாட்சம் கிடைக்கட்டும். தலைமையின் கனதியை தகுதியாய் தெரிந்து தாமிருத்தி தம்பணிதனை ஒப்பேற்றிய இறைவனின் கருணையை என்னவென்பது.

ஆலயந்தொழுவது சாலவும் நன்று என்னும் அருள்வாக்குக்கிணங்க அறிவியல் நகர் வாழ் சமூகத்தின் நல்வாழ்வுக்கு எம்பெருமான் என்றும் பக்கபலமாகவும் அனைத்து வளங்களையும் அள்ளித் தருவார். அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் நாள் அனைவருக்கும் பொன்னாள். இறைவனை துதித்தலும் அவர் அருட்கடாட்சம் பெறுதலும் எமது வாழ்நாள் புண்ணியம். பல்கலையின் அறிவியல் நகர் வளாகத்தின் அருட்கதவு திறக்கப்பட்டிருக்கின்றது. எம்பெருமான் அனைத்து மதத்தவர்களுக்கும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானவர். முயற்சி செய்யும் அனைவருக்கும் முன்னின்று துணைபுரிபவர். அனைவரும் இணைந்து அறிவியர் நகர் வளாகத்தின் கல்விவளர்ச்சிக்கு பங்காற்ற வேண்டும். இங்கு கற்று வெளியேறும் அனைத்து பட்டதாரி மாணவர்களுக்கும் எம்பெருமான் அருட்கடாட்சம் என்றும் கிடைக்கும். அனைத்து பணியாளர்கள் ஊழியர்கள் அனைவரதும் குடும்ப உறுப்பினர்களின் நலன்களும் இறையின் துணையுடன் சிறந்திருக்க என்றென்றும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

# கும்பாபிஷேக கிரியை விளக்கம்

கும்பாபிஷேகம் என்பது பெருஞ்சாந்தி விழா என்றும் பிரதிஷ்டை என்றும் பலவாறாகப் பெருமைப்படுத்திச் சொல்லப்பட்டாலும், பிரதிஷ்டை என்ற சமஸ்கிருதச் சொல்லே அனேகமாக வழக்கில் உள்ளது. பிரதிஷ்டா என்பது சிறப்பாக நிற்றல் எனும் பொருள்படும். இறைவன் ஆலயத்திலே சிறப்பாக நிற்கும் பொருட்டு செய்யப்படும் மங்களகரமான கிரியைகள் கும்பாபிஷேகம் என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது. ஒரு ஊரில் கும்பாபிஷேகம் நடைபெற்றால் ஊர் சிறப்புறும். கல்வி, செல்வம், நீதி, மனத்தில் சாந்தி, சுபீட்சவாழ்வு, உலக நன்மை என்பன கிடைக்கும்.

#### கும்பாபிஷேக வகைகள்

1. ஆவர்த்தம் - ஓரிடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம் செய்யப்படுவது.
2. அனாவர்த்தம் - பூஜை இல்லாமலும் ஆறு, கடல் இவற்றால் சிதிலமடைந்திருந்தாலும் அக்கோயிலை புதிதாக நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்வது
3. புனராவர்த்தம் - கருவறை, பிரகாரம், கோபுரம் முதலியன பழுது பட்டிருந்தால் பாலாலயம் செய்து அவற்றைப் புதுப்பித்து அஷ்ட பந்தன சாந்தி பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வது.
4. அந்தரிதம் – கோயிலுள் ஏதேனும் தகாதன நேர்ந்துவிடின் அதன் பொருட்டு செய்யப்படும் சாந்தி.

கிரியைகளின் கிரமங்களை நோக்கும்போது, கர்மாரம்பம் முதல் யாகாரம்பம் வரை சாந்தி கர்மங்களை பூர்வாங்கம் எனவும், யாகபூஜை முதல் மண்டலாபிஷேகம் வரையான கிரியைகள் உத்தராங்கம் எனவும் அழைக்கப்படும். மண்டலாபிஷேகத்தை 45 நாள், 24 நாள், 15 நாள், 12 நாள், என்னும் அடிப்படையில் பொருளாதார, நாட்டு வசதிக்கேற்ப செய்யலாம் என ஆகம தீபிகைகள் கூறுகின்றன.

#### மேற்கொள்ளப்படும் கிரியைகள்

1. **அனுக்ஞை** – {அனுமதி வாங்குதல்} செயல்களைச் செய்யும் ஆற்றல் மிக்க ஓர் ஆசாரியனைத் தேர்ந்து எடுத்து இச்செயலைச் செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனம் செய்தல்.
2. **சங்கல்பம்** – இறைவனிடத்தில் நமது தேவைகளை கோரிக்கையாக வைத்தல்.
3. **பாத்திர பூஜை** – இறைவனுக்காக செய்யப்படும் பூஜைக்குண்டான பூஜா பாத்திரங்களை சுத்தம் செய்யும் பொருட்டு அந்தந்த பாத்திரங்களுக்குரிய தேவதைகளை பூஜை செய்தல்.
4. **தன பூஜை** - புண்ணிய வசத்தால் கிடைத்த திரவியத்தைப் பூஜை செய்தலாகும்.





5. **திரவியவிபாகம்** - பூஜை செய்த திரவியத்தை ஒருபாகம் ஆலயக் கட்டட வேலைக்கும், இரண்டாம் பாகம் நித்திய பூஜை, மாதாந்த விசேட நட்சத்திர பூஜை, உற்சவம், ஆபரணாதிகட்கும், இராமாதிவாங்கவும்,மூன்றாவது பாகத்தை பதினொருபாகம் செய்தல் வேண்டும் அவை:

| | |
|---|---|
| *1. யாகம் கட்டுதல் முதலானவற்றிற்கு* | *2 பாகம்* |
| *2. அபிஷேக திரவியத்திற்கு* | *1 பாகம்* |
| *3. ஆசாரிய தட்ஷிணைக்கு* | *2 பாகம்* |
| *4. மூர்த்தியர்கட்கு* | *1 பாகம்* |
| *5. வேதாதி - திருமுறைகட்கு* | *1 பாகம்* |
| *6. தானாதிகட்கு* | *1 பாகம்* |
| *7. பிராமண போஜனம், அன்னதானம்* | *1 பாகம்* |
| *8. சிற்பிக்கும் பரிஜனங்கட்கும்* | *1 பாகம்* |
| *9. யாக திரவியங்கட்கும்* | *1 பாகம்* |
| | *11 பாகம்* |

*6.* ***ஆசாரியவர்ணம்*** *:- பிரதான ஆசாரியரையும், சர்வசாதகரையும் வணங்கி இத்திரவியத்தைக் கொண்டு மகாகும்பாபிஷேகம் செய்து இறையருளைப் பெற்றுத்தர வேண்டும் என்று எசமான் குருவை வழிபடுதலாகும்.*

*7.* ***கணபதி பூஜை*** *– செயல் இனிது நிறைவேற கணபதியை வழிபடுதல்.*



*8.* ***வருண பூஜை*** *– அவ்விடத்தை சுத்தம் செய்யும் பொருட்டு வருண பகவானையும் சப்த நதி தேவதைகளையும் வழிபடுதல்.*

*9.* ***பஞ்ச கவ்ய பூஜை*** *– ஆத்ம சுத்தி செய்யும் பொருட்டு பசு மூலமாக கிடைக்கும் பால்,தயிர்,நெய்,கோசலம்,பசுச்சாணம் முதலியவைகளை வைத்து செய்யப்படும் கிரியை.*

*10.* ***கிராமசாந்தி*** *- சகலலோக சுகத்துக்கும், புதிதான பட்டினம், கிராமங்களில் உள்ள அசுர, இராட்சத, பிசாச, பிரம ராட்சதர்களைத் திருப்தி செய்து சந்தோசப்படுத்தி, கிராம அதிதேவதையான வைரவரைப் பூஜித்தலாம்.*

*11.* ***பிரவேச பலி*** *– நாம் பிரவேசம் செய்து மகா கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் உள்ள எட்டுத்திக்குகளிலும் வசிக்கின்ற, இயக்கர், இராட்சதர், பிசாசர், பிரம இராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலிய தேவதைகளுக்கு உணவு கொடுத்து எழுப்பி அவர்களை முறையே கடல், மலை, வனம், நதி மயானம் முதலிய இடங்களிற்சென்று சுகமாய் வீற்றிருங்கள் இது சிவன் கட்டளை எனக் கூறித் திருப்தி செய்தலாம். இது மகாகும்பாபிஷேகம், திருவிழா, புதுவீடு குடிபுகல் போன்ற காரியங்களிற் செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.*

*12.* ***வாஸ்து சாந்தி*** *– தேவர்களை வழிபட்டுக் கும்பாபிஷேகம் எவ்வித இடையூறுமின்றி இனிது நிறைவேற; செயலுக்கும் செய்பவர்க்கும் இடையூறு வராதபடி காக்கச் செய்யும் செயல்.*



*13.* ***மிருத்சங்கிரஹணம்*** *– {மண் எடுத்தல்} அஷ்ட திக்குப்பாலகர்களிடம் அனுமதி பெற்று சுத்தமான இடத்தில்ருந்து மண் எடுத்து அப்பள்ளத்தில் அபிஷேகம் செய்தல். {ஆலய நிர்மாணம் செய்ய பூமி தாயான பூமா தேவியை கஷ்ட படுத்தினதன் காரணமாக பூமா தேவியை மகிழ்விக்க செய்யப்படும் கிரியை}*

*14.* ***அங்குரார்ப்பணம்*** *– {முளையிடுதல்} எடுத்த மண்ணை பாலிகைகளில் விதைகளையிட்டு முளை வளர செய்தல். இதில் 12 சூர்யர்களான வைகர்த்தன், விவஸ்வதன், மார்த்தாண்டன், பாஸ்கரன், ரவி, லோகபிரகாசன், லோகசாட்சி, திரிவிக்ரமன், ஆதித்யன்,சூரியன்,அம்சு மாலி,திவாகரன் போன்ற இவர்களையும் சந்திரனையும் வழிபடுதல்.*

*15.* ***ரக்ஷாபந்தனம்*** *– {காப்புக்கட்டுதல்} கிரியைகளைச் செய்யும் ஆசாரியனுக்கும் செய்யும் கர்த்தாவுக்கும் எவ்வித இடையூறுகள் வராதபடிக் காத்தற் பொருட்டு. அவன் கையில் மந்திர பூர்வமாகக்*

காப்பு {கயிறு} கட்டுதல்.



16. **கும்பலங்காரம்** – கும்பங்களை {கலசம்} இறைவன் உடம்பாக பாவித்து அலங்காரம் செய்தல்.

17. **கலா கர்ஷ்ணம்** – {சக்தி அழைத்தல்} விக்ரஹத்தில் இருக்கும் சக்தியை கும்பத்திற்கு மந்திர பூர்வமாக அழைத்தல். எந்தெந்த மூர்த்திகளை எந்தெந்தக் குடத்தில் ஆவாகனம் செய்கிறோமோ, அந்தந்த மூர்த்திகள் அந்தந்தக் குடங்களில் இருப்பதாகப் பாவனை செய்து வழிபாடு செய்தல்.

18. **யாகசாலா பிரவேசம்** – கலசங்களை யாகசாலைக்கு அழைத்து வருதல்.

19. **சூர்ய,சோம பூஜை** – யாகசாலையில் சூர்ய சந்திரனை வழிபடுதல்.









20. **யாக மண்டப பூஜை** – அமைக்க பட்டிருக்கும் யாகசாலையை பூஜை செய்தல்.

21. **பிம்பஸ்தாபனம்** - மூர்த்திகளை முறைப்படி வைத்தலாம்.

22. **அஷ்டபந்தனம்** - எட்டு விதமான பொருட்களை இடித்துப் பெறப்பட்ட மருந்தினால் மூர்த்தியைப் பீடத்துடன் ஒன்று சேர்த்து இணைப்பதாகும். இது இறைவனின் அம்சமாகிய அஷ்ட மூர்த்திகளின் அருள் பெற்று, அணிமாதி அஷ்டசித்திகளும் சித்தியடைந்த நிலையில் ஞானகிரியா சக்தியாகும் சங்கநிதி, பதுமநிதி, இரண்டும் தோன்றிப் பரம்பொருளின் ஆணையால் சாம்பிராட்சிய லட்சுமியும், அதில் இருந்து பயன் தரும் வகையில் தனலட்சுமி, தான்ய லட்சுமி, வித்தியா லட்சுமி, கீர்த்தி லட்சுமி, சௌபாக்கிய லட்சுமி, வீர லட்சுமி, ஜெயலட்சுமி, சந்தான லட்சுமி ஈறாக அஷ்ட லட்சுமிகளும் உருக் கொண்டு உயிர்களை உய்விக்கும் வண்ணம் உள்ள கதிகளைத் தருவது அஷ்டபந்தன சமர்ப்பணமாம்.

23. **ஸ்துரபிஸ்தாபனம்** - அதிஸ்டானம் முதல் (பட்டிகை) ஸ்தூபிவரியந்தமும் தூலலிங்காக அமைந்த பத்மத்தின் (விமானத்தின்) மேல் ஸ்தூபியை வைத்தலாம்.

24. **தீபஸ்தாபனம்** :- இறைவன் சோதிவடிவினன்; அவனைச் சோதி வடிவாக வணங்குவதற்காக வைக்கப்படுவது தீபஸ்தாபனமாம்.

25. **பிம்ப சுத்தி** – விக்ரகங்களை மந்திர பூர்வமாக சுத்தம் செய்தல்.

26. **நாடி சந்தானம்** – யாகசாலை இடத்திற்கும் மூல திருமேனிக்கும் தர்பைக் கயிறு, தங்க கம்பி, வெள்ளிக்

கம்பி, அல்லது பட்டுக் கயிறு இவற்றால் இணைப்பு ஏற்படுத்துதல். (இறைவனின் சக்தியில் ஒரு பகுதியை இந்த இணைப்பு மூலமாக விக்ரஹங்களுக்கு கொண்டு சேர்த்தல்)




27. **விசேஷ சந்தி** - *36 தத்துவ தேவதைகளுக்கும் அர்க்யம் தருவது, உலகத்தில் உள்ள அனைத்து ஆத்மா பித்ருக்களுக்கு அர்க்யம் தருவது.*



28. **பூத சுத்தி** – *இந்த பூத {மனித} உடம்பை தெய்வ உடம்பாக மந்திர பூர்வமாக மாற்றி அமைத்தல்.*

29. **ஸ்பர்ஷாஹுதி** – *36 தத்துவங்களை யாகத்திலிருந்து மூல விக்ரகங்களுக்கு கொண்டு சேர்த்தல்.*

30. **அஷ்ட பந்தனம்** – *எட்டு பொருள்களால் ஆன இம்மருந்தினால் மூர்த்தியையும், பீட்த்தையும் ஒன்று சேர்த்தல். இதை மருந்து சாத்துதல் என்பர்.*



31. **பூர்ணாஹுதி** – *யாகத்தை பூர்த்தி செய்தல்.*

32. **ஸ்தூபி கும்பாபிஷேகம்** *:- விமானங்களில் உள்ள ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்தல்.*

33. **மஹாகும்பாபிஷேகம்** – *{குடமுழுக்கு} யாக சாலையில் மூர்த்திகளுக்குரியதாக வைத்துப் பூஜிக்கப்பட்ட குடத்து நீரை அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்தல். இதனால் அந்த மூர்த்தி அந்த விக்ரகத்தில் எழுந்தருள்கிறார். அர்ச்சகர், ஸ்தானிகர் ஒருவரை நந்திகணத்தலைவராகப் பூஜை செய்து, அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து அலங்கரித்து, அவரது சிரசின் மீது பிரதான கடத்தை வைத்து, சர்வசாதகர், பிரதானகுரு, மூர்த்திபர்கள் முதலியோர் கும்பத்தைத் தொட்டுக்கொண்டு, எஜமான்கள், பக்தஜனங்கள் சூழ்ந்து புஷ்பாஞ்சலி, வேதம், தேவாரம், தோத்திரம், சங்கு, மங்கள வாத்தியம், பேரி, மணி முதலிய வாத்திய கோசங்களுடன் சிவநாம பஜனை செய்து பக்தியுடன் மெதுவாக வீதிவலம் வந்து, மூலாலயம் சென்று, ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து, கும்பத்திற்கும் மூர்த்திக்கும் நாடிசந்தானம் செய்து தொடர்பேற்படுத்தி, உரிய முகூர்த்தத்தில் இறைவனை ஆவாகனம் செய்து, மூலமந்திரம் உச்சரித்துப் பதமந்திரத்துடன் பக்தர்கள் ஹரஹா என்ற சத்தம் முழங்க, வேத சிவாகமம், தேவார, புராண திருமுறைகளைப் பக்தர்கள் ஒத, சகல வாத்திய கோசங்களும் ஒலிக்க, மகாகும்பாபிஷேகத்தைச் செய்து எஜமானர்களும் சகல ஜீவராசிகளும் உய்தி அடையப் பிரார்த்தித்துச் செய்வதே மகாகும்பாபிஷேகமாகும். வர்த்தனீ கும்பத்தை ஆவுடையாருக்கும், வித்தயேஸ்வாக் கும்பங்களை ஆவுடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து, மகா நைவேத்திய உபசாரம் செய்து, அகண்ட தீபம் வைத்துப் பிரார்த்தித்த பின்னர் தேவர்களின் பூஜைக்காக மூன்றே முக்கால் நாழிகைக்குக் கதவைச் சாத்தி வைக்கவும்.*

34. **தச தரிசனம்** *:- கதவைத் திறந்து பசு, ஆசாரியர், வேதபாரகர், கண்ணாடி, பூரணகும்பம், தீபம், கன்னிகை, சன்னியாசி, சுமங்கலி, எஜமான், பக்தசனம், முதலியோரைச் சகல வாத்திய உபசாரங்களுடன் தனித்தனியே தரிசிக்கச் செய்தல்.*

35. **மஹாபிஷேகம்** – கும்பாபிஷேகம் முடிந்த பிறகு மூல விக்ரஹத்திற்கு முறைப்படி அபிஷேகம் அலங்காரம் செய்தல்.

36. **மண்டலாபிஷேகம்** – கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஒரு மண்டலத்துக்கு இடம்பெறும் விஷேச அபிஷேக ஆராதனையாகும்.

37. விதிப்படி கும்பாபிஷேகம் நிறைவேறிய பின்னர் தினந்தோறும் அபிஷேகமும் அலங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெறும். இது பொதுவாக 'மண்டலாபிஷேகம்' என வழங்கப்படும்.

38. கும்பாபிஷகத்தில் அஷ்டபந்தனம் சாத்திய தோஷங்கள் நீக்கற் பொருட்டும் வேறு குறை குற்றங்கள் நேர்ந்திருப்பின் அவற்றை நீங்குதற் பொருட்டும், கும்பாபிஷேகம் செய்த பலனை அடைவதன் பொருட்டுமே மண்டலாபிஷேகம் அவசியம் செய்யப்படுகின்றது. ஆதலின் கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தியின் சாந்தியாக விளங்கும் மண்ட லாபிஷேகத்தில் இடம்பெறும் சங்காபிஷேகத்தில் பெரும்பாலும் அஷ்டோத்தர சத (108) அல்லது அஷ்டோத்தர சகஸ்ர (1008) என்னும் வகையில் இறைவன் திருச்சந்நிதியில் பன்னிரண்டு இராசி குண்டங்களாகப் பிரித்து ஒவ்வோர் இராசி குண்டங்களிலும் ஒன்பது சங்குகள் வீதம் பன்னிரண்டு இராசியிலும் 108 சங்குகள் வைத்து எட்டுத் திக்குகளுக்கும் எட்டுப் பிரதான சங்குகளையும் நடுவில் வலம்புரி, இடம்புரி இரு சங்குகளையும் "சிவசக்தி" என தாபித்து சுகந்த வஸ்துகள் முதலியவற்றுடன் கலந்த நீரை சங்குகளில் நிரப்பி, மேலே மாவிலை, தருப்பை, புஷ்பம் முதலியவற்றால் அலங்காரம் செய்து அதில் இறைவனை ஆவாகித்து அதனை முறைப்படி பூசித்து அந்நீரை ஆலய மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்யப்படும்.












# கடந்த கால இந்து சமய நிகழ்வுகளின் நினைவுகள்













# ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய உருவாக்கத்தின் மைல்கற்கள்




















ஸ்ரீ சித்திவிநாயகர்



ஸ்ரீ மஹாலக்ஷ்மி



***ஸ்ரீ சுப்ரமணியர்***



***ஸ்ரீ வைரவர்***

# 3

# வழிபாட்டு முறைகள்





# ஆலயவழிபாடு

**திரு. மயூரேசன் கிருஷ்ணமூர்த்தி**,
*உதவி விரிவுரையாளர், பொறியியல் பீடம்,*
*யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.*

திருச்சிற்றம்பலம்

*ஆக்கை யாற்பயனென் - அரன்*
*கோயில் வலம்வந்து*
*பூக்கை யாலட்டிப் போற்றி யென்னாதவிவ்*
*வாக்கை யாற்பயனென்.*

*கால்க ளாற்பயனென் - கறைக்*
*கண்ட னுறைகோயில்*
*கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்*
*கால்க ளாற்பயனென்.*

திருச்சிற்றம்பலம்

திருஅங்கமாலை
*(அருளியவர் : திருநாவுக்கரசு நாயனார்*
*திருமுறை : நான்காம் திருமுறை)*

*ஆலயம் எனப்படுவது பசுவாகிய ஆன்மா பதியாகிய இறைவனிடம் லயிக்குமிடமாம். அத்தனை உயிர்களும் பரம்பொருளாகிய இறைவனிடத்து இரண்டறக்கலந்து முத்தியின்பம் பெறுவதே துன்பச்சாகரத்து மீண்டு பேரின்பம் பெறும் ஒரே வழி என்று சைவசித்தாந்தம் உணர்த்தி நிற்கும். இறைவன் திருவடிகளை என்றென்றும் சிந்தித்தலும் வணங்குதலும் ஈடேற்றத்துக்கு வழிவகுக்கும். ஆன்மாவானது ஈடேற்றம் பெறுவதற்கு ஆலயவழிபாடு பெருஞ்சாதனமாக பன்னெடுங்காலமாக சைவ சமயத்தில் இருந்து வந்துள்ளது. உலக வாழ்க்கையில் நம்மை மேன்மை பெற்று வாழ வைக்க ஆலய வழிபாடு ஓர் ஒப்பில் சாதனமாகும்.*

*ஆலயவழிபாட்டின் பெருமையை உமாதேவியார், விநாயகப்பெருமான், சுப்பிரமணியக்கடவுள், பிரமா, விட்டுணு, சரஸ்வதி, இலக்குமி, திருநந்திதேவர், அகத்தியமுனிவர், வசிட்டமுனிவர், , நவக்கிரகங்கள், ஏனைய முனிவர், தேவர்கள், சமயாசிரியர்கள், பட்டினத்தடிகள், அரசர்கள், முதலிய பற்பலரும் பூவுலகில் வந்து நிகழ்த்திய ஆலய வழிபாடும் அதன் வழி பெற்றுய்ந்த பேறுகளையும் பல்வேறு புராணங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். மற்றும் அஃறிணைகளாகிய சிலந்தி, நாரை, கரிக்குருவி, சர்ப்பம், யானை முதலியவையும் ஆலயவழிபாட்டாலே முத்தியடைந்து பெற்ற பெரும் பேற்றினையும் தலபுராணங்கங்கள் பறைசாற்றி நிற்கின்றன.*

*எம்பெருஞ்சைவசமயம், நங்கற்பனை கடந்த வழிபாட்டு முறைகளையும் கிளை பரப்பி விழுதூன்றி நிற்குமோர் முதுபெரும் ஆல விருட்சமாம். ஊன் படைத்து, தன் கண்ணை அப்பி, பக்தியினால் எமதூனையும், உயிரையும் உருக்க வல்ல கண்ணப்ப நாயனார் பக்தியை கூறி நிற்கும் பெரியபுராணம், வேதங்களையும், வேள்விச்சிறப்பையும் தம்மொப்பிலாத் திருப்பதிகங்களில் உணர்த்தி நிற்கும், கிரியை நெறி நின்ற திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளையும் மெச்சி நிற்கும். அறுபத்துமூன்று நாயன்மார்களும், அதற்கு முற்காலத்தும், அக்காலத்தும், பிற்காலத்தும் வாழ்ந்த மெய்யடியர்களும் காட்டிச்சென்ற வழிகள் கணக்கிலடங்காதவை. பக்திநெறிக்கு விதி செய்தலரிது, எனினும் கிரியைமுறை வரன்முறைகள் உடையது. அடியவர்கள் ஆத்மார்த்தமாக வழிபடுவது அவரவர் பக்குவத்திற்கேற்ப வகுத்துக்கொள்ளலாம், ஆனால் ஆலயவழிபாடு கூட்டு வழிபாட்டினையும் அங்கமாக கொண்டது. ஆதலால், ஆலயங்கள் ஆகம சாத்திரங்களை பின்பற்றி அமைந்தன. கிராமிய ஆலயங்களும், குலதெய்வ வழிபாடுகளும் ஆகம வழிக்குள் அடங்கா. ஆகம விதிப்படி அமைந்த ஆலயங்கள் பல்வேறு ஒழுங்குமுறைகளை பின்பற்றி நிற்கும். இவ்விதிமுறைகள் ஆலய வழிபாடு மற்றும் கிரியைகளின் பலன்களை மேலும் செம்மையாக்கி அடியவர்கள் பயன் பெறும் பொருட்டேயாம். காலமாற்றத்தோடு சில வழக்கங்கள் வலிந்தும், சில வழக்கங்கள் நலிந்தும் போவது தவிர்க்க முடியாது. இக்காலத்திலே ஆலயவழிபாட்டினைப் பற்றி இங்கு சற்று உற்று நோக்கலாம்.*

*ஆலயத்திற்கு நாள்தோறும் சமய ஆசாரப்படி சென்று வழிபாடு செய்தல் மிகச்சிறப்பு. இறைவன் உறையும் ஆலயம் பரிசுத்தமான மேன்மையான இடமாகும். எனவே ஆலய வழிபாட்டிற்குச் செல்வோரும் தமது உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். மது, மாமிசம் அருந்தியோ புசித்தோ ஆலயத்துள் செல்லுதல் கூடாது. ஸ்நானம் செய்யாது தோய்த்துலர்ந்த ஆடைதரியாது செல்லுதல் கூடாது. அத்துடன் மாதவிலக்கு, பிற தொடக்குகள் உள்ள காலத்தில் கண்டிப்பாகச் செல்லுதல் கூடாது. எம்மையறியாமல் முடி உதிர்ந்து பூசைப்பொருட்களில் சேர்ந்தாலும் மாபாவமாகும். ஆதலால், பெண்களும், நீண்ட முடி உடைய ஆண்களும் தலைவிரி கோலத்துடன் ஆலயத்திற்குச் செல்லுதல் கூடாது. ஆலயத்திற்குச் செல்லும் போது நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து சிவசின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம்*

என்பவற்றை அணிந்து இறைசிந்தையுடன் செல்லுதல் வேண்டும். விபூதியும் உருத்திராக்கமும் முக்கியமான சைவசமயசின்னங்களாகும். இவை எமது அஞ்ஞானத்தைப்போக்கித் தீமைகளினின்றும் எம்மைப் பாதுகாத்து, இறைவனையும் அவனது பெருங்கருணையையும் நினைவூட்டும் சாதனங்களாகும். இவைக்கு மந்திர சக்தியை தம்மகத்தே சேமிக்கும் ஆற்றல் உண்டு. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநீற்றுப்பதிகம் பாடி திருநீறு பூசி பாண்டியன் வெப்புநோயை நீக்கியமை போன்று கிராமங்களில் இன்றும் திருநீறிட்டு குறை நீக்கும் வழக்கம் கண்கூடு. உருத்திராக்கத்தின் மகிமையையும் புராணங்கள் விதந்து கூறும்.

ஆலயத்திற்குச் செல்லும்போது சுவாமிக்கு நிவேதனத்திற்காக மிகவும் சுத்தமான பாத்திரத்தில் (பிளாஸ்ரிக் பாவனையை தவிர்த்தல் உத்தமம்) தேங்காய், பழங்கள், பாக்கு, வெற்றிலை முதலான எம்மாலியன்ற பொருட்களை கொண்டு செல்லுதல் சிறப்பாகும். அவற்றை அரைக்கு மேலாகத் தூக்கிச் செல்லுதல் வேண்டும். அப்படி எம்மை ஆளும் இறைவனுக்கு அளிக்கும் நிவேதனமாகக் கொண்டு செல்லும் பொருட்கள் மிகவும் உத்தமமாக இருத்தல் அவசியம். பழங்கள் கனிவானவையாகவும், இனிமையானவையாகவும், பழுதற்றவையாகவும், காம்பு, நுனி நீக்கியிருத்தல் வேண்டும். தேங்காய் தும்புகள் அகற்றப்பட்டு, அதில் எவ்வித மாசுக்களும் (நூல், முடி) சிக்கியிரா வண்ணம் மிகவும் சிரத்தையாக சுத்திகரித்து அதிகமாயோ குறைவாயோ இல்லாமல் அளவான முடியுடன் இருக்க வேண்டும். வெற்றிலை பழுப்பு, கறுப்பு அற்றதாக காம்பு, நுனி நீக்கி தூய்மையாகவிருத்தல் வேண்டும். நிவேதனத்திற்குரிய பாக்கு சீவலாகவும், தானத்திற்குரிய பாக்கு முழுமையானதாகவும் இருத்தல் வேண்டும். அதனைப்போன்று ஆலயத்தில் அக்னி காரியத்திலே ஓமகுண்டத்திலே இடும் பொருட்கள் மிகவும் தூய்மையாகவிருத்தல் வேண்டும்.

தற்காலத்தில் மிக மிக வேதனைக்குரிய விடயமென்னவெனில், 'ஆலயத்தேவைக்கு மட்டும்' என்று அச்சிட்டே சில பொருட்கள் விற்பனைக்கு வருகின்றன. தேன், நெய் போன்ற பெயரில் வரும் பொருட்கள் இதில் முக்கியமானவை. சர்க்கரை/வேறு பொருட்களை கலந்து தேன் என்றும், உணவிற்குதவாத எண்ணெய், மெழுகுகளைக் கலந்து நெய்யென்றும் விற்கிறார்கள். சிலர் இதை தெரியாமலும், சிலர் தெரிந்தும் விலைகருதியும் வாங்குகிறார்கள். தயவுகூர்ந்து தெரியாதவர்கள் கவனமாக பார்த்து வாங்குங்கள். இவற்றை பாவித்து செய்யும் பூசையால் நற்பலனுக்கு பதில் துர்ப்பலனே வாய்க்கும். மேலும், உணவிற்கொவ்வாத இரசாயனப்பொருட்கள் மூலம் கனிய வைத்த பழங்களையும், உகந்த அளவு கனியாத பழங்களையும் கோயிலுக்கெனில் வாங்கலாம் எனவும் உணவுத்தேவைக்கு தவிர்க்கலாம் எனவும் கருதியும் சொல்லியும் சில வியாபாரிகளும், மக்களும் நடந்து கொள்வது, அவர்கள் அறியாமையை எண்ணி வேதனை கொள்ள வைக்கிறது. பட்டுகள் வாங்கும் போதும் முடிந்தவரை சுவாமி விக்ரகத்திற்க்கு ஏற்றால் போல் தரமான பட்டை வாங்குதல் நன்று. மிகவும் விலை குறைவானது என்று கருதியும் சம்பிரதாயமாக எண்ணியும் வாங்காமல், எமக்கு உடை வாங்கும் போது எவ்வளவு கவனம் எடுக்கின்றோமோ அதிற்சிறிதளவேனும் கொள்ளல் சிறப்பு. எம்மால் இயன்றவரை உத்தமமானவற்றையே இறைவனுக்கு சமர்ப்பிக்க வேண்டும், இல்லையெனில் மனதார வணங்கினாலே இறையருள் பூரணமாக எவர்க்கும் கிட்டும். மேலும், எச்சிற்படுத்தி பாவிக்கும் பிளாஸ்ரிக் போத்தலில் பால் போன்ற அபிஷேகப்பொருட்களைக் கொணர்வதை விடுத்து தூய பாத்திரத்தில் கொணர்தல் சிறப்பு. மிக ஆபத்தான இன்னோர் விடயம், பிளாஸ்ரிக் பெட்டியில் வாங்கும் தயிர். பெரும்பாலான உற்பத்தியாளர்கள் தயிரிற்கு ஜெலரின் (Gelatine: மிருகங்களின் என்பு மச்சையில் பெறப்படுவது) சேர்க்கிறார்கள். இதனைப்பாவிப்பது மாமிசம் சேர்ப்பதற்குவொப்பாகுமோ என்பது சிந்தனைக்குரியது. இத்தகைய தயிர் / சந்தேகத்திற்குரியது எனின் தவிர்ப்பதே உத்தமம்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பர் பெரியோர். ஆலய தரிசனத்திற்குச் செல்லும்போது ஆலயத்தைச் சமீபித்ததும் முதலில் தூலலிங்கமாகிய கோபுரத்தைத் தரிசித்து வணங்க வேண்டும். பிரபஞ்சம் முழுவதையும் தனது உறுப்புக்களாய்க் கொண்டு கண்ணுக்குப் புலனாகும் இலிங்கமே ஆலயகோபுரமாகும். ஆலய கோபரத்தை இறைவனின் விஷ்வரூபமாக எண்ணி வணங்கியபின் கோயில் திருக்குளத்திலோ கிணற்றிலோ கை,கால் கழுவி ஆசமனம் செய்தபின் முன்மண்டபத்திலுள்ள துவாரபாலகர்களை வணங்கி அவர்களிடம் அனுமதி பெற்று உட்செல்லல் வேண்டும். அங்கு நந்திதேவரை வணங்கி அவரிடம் தரிசன அனுமதி பெறல் வேண்டும். பின் மூலமூர்த்தியை வணங்கித் திருமுறை பாடி, பஞ்சாட்சரமந்திரம் உச்சரித்தபடி வீதிவலம் வந்து பரிவார மூர்த்திகளை முறைப்படி வணங்குதல் வேண்டும்.


பிரகார வலம் பொதுவான சந்தர்ப்பங்களில் (இகத்தில் நன்மை கருதி) இடமிருந்து வலமாக வரவேண்டும். துறவிகளும், பரகதியில் நன்மை கருதுவோரும் வலமிருந்து இடமாக சுற்றும் வழக்கமும் உண்டு. கோவிலில் பிரகாரத்தை சுற்றி வருவதால் முற்பிறவியில் செய்த பாவம் நீங்கும். அப்படி வலம் வரும் போது, நிறைமாத கர்ப்பிணி நடப்பது போல மெதுவாகவும், தெய்வ சிந்தனையுடனும் வலம் வர வேண்டும். ஓடுவது, வேகமாக நடப்பது, சப்தம் எழுப்புவது, தேவையற்றதை பேசிக்கொண்டே வருவது ஆகியவை பாவத்தை அதிகமாக்கும். இவ்வாறு செய்யும்போது பிறருக்கு இடைஞ்சல் வராதபடி மனதிற்குள் இறைவனை வணங்குதல் வேண்டும். பொதுவாக 3, 5, 7, 9, 11, 13, 15, 21, 108 முறையாயினும் வலம் வந்து வணங்கலாம். அபிடேகம் நடக்கும் வேளையிலோ, பூசைக்கு முன்பு திரையிட்டிருக்கும்வேளயில் ஆலயத்தைச் சுற்றிவருதலோ வழிபாடு செய்வதோ கூடாது. மேலும் சிறப்பு எண்ணிக்கையாக ஒவ்வொரு தெய்வத்தையும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் வலம் வந்து வழிபாடு செய்யலாம். விநாயகரை ஒரு முறையும், சூரிய பகவானை

இரண்டு முறையும், ஈஸ்வரனையும், அம்மனையும் 3 முறை வலம் வர வேண்டும். விஷ்ணுவை நான்கு முறையும், லட்சுமி தாயாரை ஐந்து முறையும், அரசமரத்தை ஏழு முறையும் சுற்றி வந்து வணங்க வேண்டும். மகான்களின் சமாதியை 4 முறை வலம் வர வேண்டும். தோஷ நிவர்த்திக்காக பெருமாளையும், தாயாரையும் வணங்குபவர்கள் 4 முறை வலம் வரவேண்டும். நவக்கிரகங்களை ஒன்பது முறை சுற்றினால் நன்மை பயக்கும். பிரதோஷ காலத்திலே அபிஷேக தீர்த்தம் வரும் கோமுகையைக் கடக்காது, முதலில் வலஞ்சுழியாக்கோமுகை வரையிலும், பின்னர் இடசுழியாக திரும்பவும் வந்து கோமுகை வரை வந்து வழிபடும் வழக்கமும் உள்ளது. தன்னைத் தானே சுற்றிக் கொண்டு வணங்குவதை ஆத்ம பிரதட்சிணம் என்பர். காலையில் சூரிய நமஸ்காரம் செய்யும் போது மட்டும், அஷ்ட திக்குபாலகர்களை வணங்கும் பொருட்டு இதைச் செய்யலாம்.

கோவிலுக்குள் ஆலய பலிபீடம், கொடிக்கம்பம் முன்புதான் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்க வேண்டும். கோயிலில் ஒவ்வொரு சுவாமிக்கும் தனித்தனியாக நமஸ்காரம் செய்யக் கூடாது. கொடிமரத்திற்கு வெளியில் செய்தால் எல்லா சுவாமிக்கும் சேர்த்து நமஸ்காரம் செய்த புண்ணியம் கிட்டும். ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமாகவும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமாகவும் விழுந்து வணங்க வேண்டும். ஆலயவழிபாட்டின்போது பலிபீடத்திற்கும் மூலஸ்தான மூர்த்திக்கும் இடையே செல்லுதல் கூடாது.

ஆலயச்சூழலிலே வீண் வார்த்தைகளைப் பேசுதல் கூடாது. வீண்சண்டைகள் பிடித்தலாகாது. இறைவன் திருநாமத்தையும், அவன் அருளையும் பேசவேண்டும். சுவாமி திருவுலாப்போகும் நேரத்தில் பெரியோர்களும் சிறுவர்களும் இணைந்து திருமுறைகள், பஜனைப்பாடல்கள் என்பவற்றைப் பாடிவரல் வேண்டும். மந்திரங்களால் ஏற்படும் உடலியல், உளவியல் விளைவுகள், மாற்றங்கள் பற்றிப்பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் இருக்கின்றன.


மந்திரங்களை ஓதும் போது உருவாகும் ஒலி அலைகளின் அதிர்வெண்ணும் (Frequency), ஒலிச்செறிவும் (Intensity) அத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கியமானவையாகும். ஆகம விதிகளில் உள்ள கோயிற் கட்டுமான ரீதியான அமைப்புகளும் இம் மந்திரங்களினால் ஏற்படும் விளைவுகளை மேலும் செறிவாகவும் செம்மையாகவும் பெற உதவுகின்றன என்பதை பல ஆய்வுகள் மெய்ப்பித்து நிற்கின்றன.




உரு 1: கருவறையில் இருந்து வரும் ஒலி அலைகளின் ஒலிப்பரம்பல்

எம். ஜி. பிரசாத், பி. இராஜவேல் என்போர், இரைச்சல் மற்றும் அதிர்வு கட்டுப்பாட்டு ஆய்வகம், இயந்திர பொறியியல் துறை, ஸ்டீவன்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, அமெரிக்காவின் சார்பில் செய்யப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பின்வரும் முடிவுகளை வழங்கி உள்ளனர்[1]. கருவறை மற்றும் அர்த்த மண்டபத்தில் ஒலியியல் ரீதியாக எதிரொலித்து உருவாகும் ஒலியியற்சூழல் பக்தர்களின் ஆன்மீக அனுபவங்களை மேம்படுத்துவது மட்டுமல்லாமல் ஆலயத்தின் பக்தி சூழலையும் மெருகூட்டுகிறது. உருக்கள் 01 மற்றும் 02 கோயிற் கட்டுமான ரீதியான அமைப்புகளுக்கு அமைவாக ஒலி பரவலைக் காட்டுகின்றன. மேலும் இவ்வுருக்கள் கருவறை மற்றும் அர்த்த-மண்டபத்தில் முறையே ஒலி எழுப்பப்படும் போது ஒலி அலைகளின்

ஒலியியல் மேம்பாடு எவ்வாறு அமையும் எனத்தெளிவாகக் காட்டி நிற்கின்றன. திருவிழாக்களின் போதும் விஷேச தினங்களின் போதும், கோவில் அர்ச்சகர்கள் கர்ப்பகிரகம் மற்றும் அர்த்த மண்டபம் இரண்டிலும் இருப்பார்கள். இது கோயில்களில் ஒலியியல் சூழலை மேலும் மேம்படுத்தும். ஆலயத்தின் உள்ளிருந்து வெளி நோக்கி தெய்வீக ஒலி அலைகள் செல்லும் போதே இது சாத்தியமாகும். மந்திரங்கள் மற்றும் ஏனைய ஒலிகளை ஒலிபெருக்கிகள் மூலம் வெளியில் இருந்து பாரிய ஒலிகளாக எழுப்பும் போது, அதிலிருந்து உருவாகும் ஒலி அலைகள் பல்வேறு தெறிப்புகள், தலையீடுகளுக்கு உள்ளாகி, ஆலயத்தினுள்ளே சீரற்ற அதிர்வெண்ணும், ஒலிச்செறிவும் உடைய அலைகளாக வந்து சேரும். இவை பக்தர்களின் ஆன்மீக அனுபவங்களையும் ஆலயத்தின் பக்திமயமான சூழலையும் குழப்புதற்கான சந்தரப்பமே அதிகம் உண்டு. மந்திரங்களை ஒலிபெருக்கி மூலம் உச்சரிப்பதென்பது மந்திரம் சொல்வதன் அடிப்படையையே கேள்விக்குரியதாக்குகின்றது. ஒலிபெருக்கி மூலம் வரும் அளவுக்கதிகமான ஒலிச்செறிவுடைய அலைகள் பல்லாண்டு பயிற்சி மூலம் செம்மையாக்கப்பட்ட ஒருவர் உச்சரிப்பிலிருந்து வரும் ஒலி அலைகளுக்கு இடையூறு ஏற்படுத்தி மந்திரம் சொல்வதின் பலனைக் குறைக்கவோ/ இல்லாதொழிக்கவோ செய்யலாம். மற்றும் தற்காலத்தில், ஒலி மாசு ஒரு பிரச்சனையாக உருவாகி வருகின்றது. எனவே எமது சைவ ஆலயங்கள் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக இவ்வொலிபெருக்கி பாவனையை இயன்றவரை விடுத்து ஆலய ஆன்மீகச்சூழலை ஒலியல்ரீதியாகவும் மேலும் செம்மைப்படுத்தினால் போற்றுதற்குரிய விடயம் என்பது அடியேனின் தாழ்மையான கருத்து!




உரு 2: அர்த்த மண்டபத்தில் இருந்து வரும் ஒலி அலைகளின் ஒலிப்பரம்பல்

இறைவனுக்கு நேர்த்தி வைத்தல் என்பது அவரவர் நம்பிக்கை. இறைவன் கருணாசமுத்திரம். மெய்யன்போடு செய்யும் எத்தொண்டுக்கும் இரங்கி அருள்வான். பணத்தை செலவழித்துச் செய்யும்நேர்த்திகளே உயர்வு என்ற தோற்றமொன்றுண்டு. இறைவன் அன்பேமயமானவன், அடியவர்கள் மெய்யன்போடும் தூயசிந்தையோடும் ஆலயத்தில் தம்மாலியன்ற தொண்டுகளைச்செய்தாலே இரங்குவான். அடியவர்கள், ஆலயத்தை சுத்தம் செய்தல், நந்தவனம் பேணல், வீதிகளுக்கு திருவலகிடுதல் போன்ற நேர்த்திகளையும் கைக்கொள்ளலாம். சில ஆலயங்களில் இவ்வழக்கம் உள்ளது வரவேற்கத்தக்கது.

ஆலய நிர்வாக சபைகளில் உள்ள அடியவர்களும், அதனைக்கௌரவப் பதவியாகவும், சுயலாபத்திற்குரிய இடமாக கனவிலும் எண்ணாது, தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை விடுத்து, தங்கடன் பணி செய்து கிடப்பதே என்று மனதார உணர்ந்து ஒற்றுமையாக இறைபணி செய்து, குருமார்களும் மெய்ப்பொருளை உணர்ந்து மக்களை மெய்நெறிப்படுத்தி, மக்களும் அவ்வழி நின்றுய்யின் இந்நாடும் இவ்வுலகும் சிவானந்தமயமாகும் என்பதில் யாதொரு ஐயமில்லை!

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

*[1] M. G. Prasad and B. Rajavel, 'Acoustics of Chants, Conch-Shells, Bells and Gongs in Hindu Worship Spaces', Acoust. 2013, pp. 137–152, 2013.*

# இந்து மதமும் விநாயகர் வழிபாடும்

**திருமதி. ம. வைதேகி,**
*வருகை விரிவுரையாளர், பொறியியல் பீடம்,*
*யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.*

உலகிலுள்ள அனைத்து மதங்களும் மனிதர்களுக்கான வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்து இறைவனை அடைவதற்கான வழிகளை விபரிக்கின்றன என்பது யாவரும் அறிந்ததே. உலகில் நிலவி வரும் பல்வேறு சமயங்களில் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்து திகழ்வது எமது இந்து சமயம் என்பது மறுப்பதற்கில்லை. இன்ன காலத்தில் இன்ன நபரால் தோற்றுவிக்கப்பட்டது என காலம் ஏதும் கூறுவதற்கு இயலாத நிலையில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டு மிகவும் பழமை வாய்ந்ததாக விளங்கி வருவது இந்து மதம்.

இந்து சமயத்தின் வழிபாட்டு முறைகள், கொள்கைகள் இயற்கையோடும் மனித வாழ்வியலோடும் இணைந்ததாகக் காணப்படுகின்றது. இந்து சமயம் வழிபாட்டு நிலையில் இதுதான் என்று அடிமைப்படுத்தும் ஆவணச்சமயம் அன்று. ஒவ்வொரு மனிதனின் ஆன்மீக வளர்ச்சியின் படித்தரத்திற்கும் மனிதன் வாழும் சூழ்நிலைக்கும் ஏற்ப கடவுட் கொள்கையை வகுத்துத் தந்துள்ளது. இயற்கையின் மூலம் இறைவனைக்காண வைக்கின்றது. சமய உண்மைகளை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு உணர்கிறோமோ அல்லது புரிந்து கொள்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் சமயத்தை நேசிப்பதோடு, மதித்துப் போற்றுவோம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பொரும் ஜோதியான இறைவனுக்கு பல்வேறு உருவங்களைக் கற்பித்து தத்தமது இயல்பிற்கும் வகுப்பிற்கும் ஏற்ப வழிபடும் பாங்கினை இந்து சமயம் ஏற்படுத்தியுள்ளது. உயிர்கள் அனைத்தும் பிறவிப் பிணியிலிருந்து விடுபட்டு முத்தியின்பம் அடையவேண்டும் என்னும் பெருநோக்கிலேயே உருவ வழிபாட்டிற்கு இத்தனை முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதியில் பல பிரிவுகளாகப் பிரிந்து வழிபாடு செய்யப்பட்ட எமது சமயத்தை சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் ஆறு பெரும் பிரிவுகளில் அடக்கி சமய சீர்திருத்தத்தை மேற்கொண்டவர் அத்வைத வேதாந்தத்தை உலகிற்குத் தந்த ஸ்ரீ ஆதிசங்கரர் ஆவார். குணபதியை முதன்மையாகக் கொண்ட பிரிவாக காணபத்தியம் இருப்பினும் இந்து மதத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் முதற்கடவுளாகத் திகழ்பவர் விநாயகர். இந்து சமயத்தில் எந்தச் செயலை தொடங்கும் முன்பும் விநாயகரை முன்நிறுத்தி வழிபட்டே காரியங்களை ஆரம்பிப்பர்.

ஆலயங்களில் கிரியை நிகழ்வுகளின் போது சங்கல்ப்பம் சொல்வது வழக்கம். அச் சங்கல்ப்பத்தில், “சுக்லாம், பரதரம், விஷ்ணும். சசிவர்ணம், சதுர்புஜம் ப்ரஸன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே” என்னும் ஸ்லோகம் ஒலிக்கப்படுகின்றது. இதன் பொருளாவது எங்கும் நிறைந்திருக்கும் பரம் பொருளே எல்லா விக்கினங்களையும் நீக்கி காரிய சித்திக்கு அருள்வீர் என விண்ணப்பம் செய்யப்படுகின்றது. மேற் கூறப்பட்ட ஸ்லோகத்தில் முதல் ஐந்து வார்த்தைகளை உச்சரிக்கும் போது ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொன்றாக ஐந்து முறை நெற்றியில் குட்டிக் கொள்ள வேண்டும். இதன் பின்னால் இருக்கும் மருத்துவ இரகசியம் ஆவது மனித உடலில் இருக்கும் ஏழு சக்கரங்களான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞேயம் மற்றும் சகஸ்ரம் ஆகியவற்றுக்கிடையே சுவாச நடப்பு நடக்கின்றது. அது மட்டுமல்லாது இந்த மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே சிரசில் குட்டிக் கொள்வதால் ஷஹஸ்ரார கமலத்தில் உள்ள ஆனந்த அமுதம் நாடி நரம்பு வழியாக நம் சுவாசத்தோடு பாயும் அதிசயம் நடக்கும்.

பிரணவமே எல்லாவற்றிக்கும் முதல், பிரணவத்தில் இருந்து தான் சகல பிரபஞ்சமும் ஜீவராசிகளும் தோன்றின. அந்த பிரணவத்தின் ஸ்வரூபமே பிள்ளையார். அதாவது உலகில் முதற் பிறந்த ஒலி ஓங்காரம் (ஓம்) என்பதாகும். ஆ, உ, ம் என்ற மூன்று ஒலிகளும் சேர்ந்ததுதான் ஓங்காரம் என்பது ‘’உ” என்று பிள்ளையார் சுழியாக வழங்கப்படுகின்றது. பிள்ளையாரின் ஆனைமுகம், வளைந்த துதிக்கை என்பவற்றையும் சேர்த்துப்பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகத் தோன்றும். விலங்காய், மனிதராய், பூதமாய், தேவராய் இந்த நான்கு படைப்புக்களின் இணைந்த உருவமாய் பிள்ளையார் தோன்றுகிறார். யானைத்தலையும், சுளகுச் செவியும் தும்பிக்கையும் யானையாக விலங்கையும், புருவ வடிவமும், கண்களும் மனிதர்களையும், நான்கு கைகள் தேவர்களிடம் இருந்து பெறப்பட்டதனையும் குறித்து நிற்கின்றது. இதனையே திருமூலர் திருமந்திரத்தில் “ஐந்து கரத்தனை யானை முகத்தனை...” என்று குறிப்பிடுகிறார்.

இவரின் திருவுருவத்தத்துவத்தை மேலும் உற்று நோக்கினால் யானை முகம் அறிவாற்றலையும், துதிக்கை பிரணவத்தின் வடிவையும், திருமேனி ஞானமே வடிவானவர் என்பதையும் அவரது பெருவயிறு எல்லா உலகங்களையும் உயிர்களையும் குறித்து நிற்கின்றது.

விநாயகருக்கு வன்னிப்பத்திரம், மந்தாரைப்பூ, மகிழம்பூ, தும்பை, முல்லை, கொன்றை, எருக்கு, வில்வம், பவளமல்லி என்பன உகந்த மலர்களாகக் கூறப்படினும் அறுகம்புல் அர்ச்சனையே மிகச் சிறப்புடையதாகக்

காணப்படுகின்றது. அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்தால் முத்திப்பேரின்பம் கிடைக்கும் என்பது அறுகின் தத்துவச் சிறப்பாகும். அறுகம்புல்லானது ஓரிடத்தில் தோன்றி கொடிபோல் நீண்டு ஆறிடங்களில் வேரூன்றிப் படர்ந்து கொண்டு செல்லும் இயல்புடையது. இங்ஙனமே மூலாதார மூர்த்தியாக விளங்கும் விநாயகர் ஆறு ஆதாரம் வழியாக பரந்து விளங்கி சகஸ்ரதளத்தில் அருள்கின்றார் என்பது அறுகம்புல் உணர்த்தும் தத்துவப் பொருளாகும்.

விநாயகரின் வழிபாட்டு முறைகளில் முதன்மையாக விளங்குவது தோப்புக்கரணம் போடுதல் மற்றும் சிதறு தேங்காய் உடைத்தலாகும். தோப்பி, கர்ணம் என்ற இரண்டு சொற்களும் இணைந்தே தோப்புக்கரணம் என மருவி வந்துள்ளது. தோர்பி என்றால் கைகளினால் என்றும் கர்ணம் என்றால் காது என்றும் பொருளாகும். எனவே தோர்பிகரணம் எனின் கைகளால் காதைப்பிடித்துக் கொள்வது என்பது கருத்தாகும். தோப்புக்கரணம் போட்டு பிள்ளையாரை வழிபடும் வழிபாட்டு முறையானது உடலின் நரம்பு மண்டல நல்லியக்கத்திற்கு வழிவகுக்கும் ஆன்மீக தத்துவ சாதனை முறையாக விளங்குகின்றது. சிதறு தேங்காய் உடைக்கும் வழிபாட்டு முறையானது ஒருவனது ஆணவமலத்தை ஒழிக்கும் செயலாகக் கருதப்படுகின்றது.

விநாயகரை நினைத்த மாத்திரத்தில் நம் மனதில் எழுகின்ற முதல் தேவாரம் திருவலஞ்சுழியில் ஞானசம்பந்தர் அருளிய "பிடியதன் உருவுமை..." என்பதாகும். பார்வதி, பரமேஸ்வரனை பிடியும் களிறுமாக உருவகப்படுத்தி "தனதடி வழிபடும் அவர் இடர் கெட" சிவனும் உமையும் விநாயகரை அருளினார் என்பதே இத் தேவாரத்தின் பொருளாகும். வாழ்கையின் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு விதமான இன்னல்கள் வந்து கொண்டே இருக்கும். ஓவ்வொருவரினதும் முன்வினைப் பயனுக்கேற்ப அவை வேறுபடும். இதனையே ஔவையார் "முன்னை வினையின் முதலைக்களைந்து" என விநாயகர் அகவலில் வேண்டுகின்றார். வுாழ்வின் விக்கினங்களை போக்கும் தெய்வம் விக்னேஸ்வரர். நம்பினார் கெடுவதில்லை எனும் நான்கு மறை தீர்ப்பிற்கமைய உள்ளன்போடு விநாயகரை வணங்கினால் பிறவிப்பிணியிலிருந்து விடுபடலாம்.

*"வேழமுகத்து விநாயகரைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"*

# பெருஞ்சாந்திக்கு சாந்தியாய் அமையும் மண்டலாபிஷேகம் அதற்கு அங்கமான சங்காபிஷேக மகத்துவம்

***தகவல்:* New Zealand Thirumurugan Temple, 2014**

*ஆலயத்திலே மூலமூர்த்திக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விதிப்படி கும்பாபிஷேகம் நிறைவேறிய பின்னர் தினந்தோறும் அபிஷேகமும் அலங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெறும். இவை குறைந்தது ஒரு பக்ஷத்துக்கேனும் நடைபெறும். இங்ஙனம் மூன்று பக்ஷங்கள் கொண்ட காலம் திரிபக்ஷம் எனப்படும். ஒரு பக்ஷம் என்பது 15 நாட்களாக திரிபக்ஷம் என்பது 45 நாட்களாகும். இக்கால எல்லையில் விசேடமான ஓர் அபிஷேகம் மூலமூர்த்திக்குச் செய்யப்படும். இது பொதுவாக 'மண்டலாபிஷேகம்' என வழங்கப்படும்.*

*மண்டலாபிஷேகத்தின் நோக்கம்: கும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்கு என்னும் பிரதிஷ்டைக்கு "பெருஞ்சாந்தி" என்றும் வழக்காறுண்டு. இப் பெருஞ்சாந்தியில் அஷ்டபந்தனம் சாத்திய தோஷங்கள் நீக்கற் பொருட்டும் வேறு குறை குற்றங்கள் நேர்ந்திருப்பின் அவற்றை நீங்குதற் பொருட்டும், கும்பாபிஷேகம் செய்த பலனை அடைவதன் பொருட்டுமே மண்டலாபிஷேகம் அவசியம் செய்யப்படுகின்றது. ஆதலின் கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தியின் சாந்தியாக விளங்கும் மண்டலாபிஷேகத்தில் இடம்பெறும் சங்காபிஷேகத்தின் தனிப்பெருமையை சிறிது விளக்குவோம்.*

*சங்காபிஷேகம்: பெரும்பாலும் அஷ்டோத்தர சத (108) அல்லது அஷ்டோத்தர சகஸ்ர (1008) என்னும் வகையில் இறைவன் திருச்சந்நிதியில் பன்னிரண்டு இராசி குண்டங்களாகப் பிரித்து ஒவ்வோர் இராசி குண்டங்களிலும் ஒன்பது சங்குகள் வீதம் பன்னிரண்டு இராசியிலும் 108 சங்குகள் வைத்து எட்டுத் திக்குகளுக்கும் எட்டுப் பிரதான சங்குகளையும் நடுவில் வலம்புரி, இடம்புரி இரு சங்குகளையும் "சிவசக்தி" என தாபித்து சுகந்த வஸ்துகள் முதலியவற்றுடன் கலந்த நீரை சங்குகளில் நிரப்பி, மேலே மாவிலை, தருப்பை, புஷ்பம் முதலியவற்றால் அலங்காரம் செய்து அதில் இறைவனை ஆவாகித்து அதனை முறைப்படி பூசித்து அந்நீரை ஆலய மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்வதை "சங்காபிஷேகம்" என்போம். இதனால் இறைவனுக்கு மூர்த்தீகரமும், சாந்நித்தியமும் உண்டாவதோடு பக்தர்களின் மனோபீஷ்டங்களும் பூர்த்தியாகி அருள்மழை பெருகும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.*

*மண் குடத்தை விட செப்பினால் செய்யப்பட்ட குடம் 1000 மடங்கு விசேஷமானது. அதனிலும் வெள்ளியினால் செய்யப்பட்ட குடம் 10 000 மடங்கு விசேடமானது. பொன்னால் செய்யப்பட்ட குடம் 200 000 மடங்கு விசேஷமானது. இரத்தினத்தால் செய்யப்பட்ட காண்டா மிருகக் கொம்பு அதைக் காட்டிலும் இருமடங்கு விசேஷம். அதைக் காட்டிலும் கடலில் தேங்கிய சங்கு கோடி மடங்கு விசேஷம் என ஆகமங்கள் கூறுகின்றன. மேலும் சங்கு சந்திரனையும் சூரியனையும் அதிதேவதையாகக் கொண்டது. சங்கின் நடுவே வருணனும், பின்பாகத்தில் பிரஜாபதியும், நுனியில் கங்கா நதியும் சரஸ்வதி நதியும் அடிப்பாகத்தே பிரமனும் நடுப்பகுதியில் சகல விதமான புண்ணிய தீர்த்தங்களும் வீற்றிருந்து அருள் பொழிகின்றனர். தெய்வீக சக்தி வாய்ந்த சங்குகளில் நீர் நிறைத்து அபிஷேகித்தலையே சங்காபிஷேகம் என்று கூறுகின்றோம்.*

*சங்காபிஷேகத்தின் அங்கமாக விநாயக வழிபாடு, பஞ்சகவ்ய பூஜை, புண்யாக வாசனம், வாஸ்து சாந்தி, கடஸ்தாபனம் முதலியன நிகழ்வதுண்டு. கடஸ்தாபனம் என்பது சங்காபிஷேகத்தின்போது வைக்கப்படும் பிரதான கும்பத்தை மந்திர சகிதமாக உருவாக்குதல், குடத்தைத் தேர்ந்தெடுத்தல், கழுவித் தூய்மையாக்குதல், தூபமிடுதல், நூல் சுற்றுதல், நீர் நிரப்புதல், அதற்குள் தர்ப்பைக் கூர்ச்சம், பவித்திரம், நவரத்தினம், தங்கம், வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை இடுதல், மாவிலை வைத்தல், தேங்காய் அல்லது வலம்புரிச் சங்கினை வைத்தல், பட்டுக் கட்டுதல், சால்வை அணிவித்தல், சந்தனம், பூமாலை, குங்குமம் முதலியவற்றால் அலங்கரித்தல் என்று இத்தகைய செயற்பாடுகள் அனைத்தும் வரிசைக்கிரமமாக வேத மந்திர உச்சாரணத்துடன் நடைபெறுவதே கடஸ்தாபனம் ஆகும்.*

*சாதாரண சங்குகள் யாவும் இடம்புரியாக இருக்கும். ஆயிரம் இடம்புரிச் சங்கிற்கு ஒரு வலம்புரிச் சங்கு கிடைக்கும் என்பர். மகா விஷ்ணுவின் கையிலிருக்கும் சங்கு பாஞ்சஜன்யம் எனப்படும். சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பர். தூய்மைக்கும் மேன்மைக்கும் அடையாளமாகச் சங்கைக் கொள்வது மரபு. குழந்தைக்கு சங்கினால் பாலூட்டும் மரபு இருந்துள்ளது. இறக்கும் தறுவாயில் இருப்போர்க்கும் சங்கினால் பாலூட்டுவர். தொடக்கமும் முடிவுமாக இருப்பது சங்கின் மகிமை. சிறிய சங்குகள் ஆபரணங்களாகப் பயன்படுத்தப்பட்டன. பெரிய சங்குகள் ஊதி ஒலி எழுப்பப் பயன்பட்டன. ஆலயக் கிரியைகளில் நந்திக்கான பூஜை, தம்ப பூஜை முதலியவற்றில் சங்கொலிக்கு முக்கிய பங்குண்டு. கொடியிறக்கத்தின் பின் மௌனோற்சவத்தில் வலம் வரும்போது மேற்கு வீதியில் சங்குநாதம் தனியாகச் சொல்லப்படுகிறது.*

*நல்ல சங்கொன்றை எடுத்து அதன் துவாரத்தைக் காதில் வைத்தால் அங்கு ஒரு இனிய நாதத்தைக் கேட்கலாம். அதுதான் ஓங்காரம். சங்கினுள் ஆகாயம் உள்ளது. அங்கு காற்றின் அசைவு உண்டு. அதன் உள்ளமைப்பு அற்புதமானது. எப்படி ஒரு கருவறையின் உட்புறம் சரியான அளவுப் பிரமாணத்தில்*

உருவாக்கப்பட்டு எல்லாப் பக்கங்களும் அடைக்கப்பட்டு உருவாக்கப்படும்போது அங்கே ஒரு சக்திப் பிரவாகம் தோன்றுகிறதோ, அதேபோலச் சங்கினுள்ளேயும் ஒரு சக்தி ஊற்றெடுக்கிறது என்பதை அறிவியலும் ஒப்புக் கொள்கிறது. எனவே அத்தகைய சக்திப் பெருக்குடன் மூலிகைகள் சேர்ந்த நீரும் மந்திர ஒலியும் சேரும்போது அருட்பெருக்கினை நாம் அங்கு சேகரிக்க முடிகிறது. அதனை மூல மூர்த்தியில் அபிஷேகம் செய்து அதனை நாம் தரிசித்தும், அருந்தியும், ஸ்பரிசித்தும் எமது புனிதத்தையும் மேம்படுத்தி அருள் பெறுகிறோம் என்பதில் ஐயமில்லை.



# பண்டிகைகள், விரதங்கள் எப்படித் தீர்மானிக்கப்படுகிறது?

*இந்துமதப் பண்டிகைகள், விரதங்கள் பொதுவாக திதி மற்றும் நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு பண்டிகையையும் / விரதத்தையும் எப்போது அனுஷ்டிக்கலாம் என விதிமுறைகள் உள்ளன. திதி என்பது ஒரு சந்திர நாள் ஆகும். ஒவ்வொரு திதியும் உலகம் முழுவதும் ஒரே கணத்தில் தொடங்கி ஒரே கணத்தில் முடிகிறது. உலகின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு உள்ளூர் நேரங்களில் தொடங்கி வெவ்வேறு உள்ளூர் நேரங்களில் முடிகிறது. அத்துடன் திதி குறிப்பிட்ட நேரத்தில் தெரியுமா என்பதையும் தீர்மானிக்க வேண்டும். இது உள்ளூர் சூரிய உதயம், உள்ளூர் சூரிய அஸ்தமனம், மற்றும் உள்ளூர் சந்திர உதயம் ஆகியவற்றைப் பயன்படுத்தி கணிக்கப்படுகிறது. பொதுவாக குறிக்கப்பட்ட திதி சூரிய உதய நேரத்தில் இருந்தால் பண்டிகை அல்லது விரதம் அனுஷ்டிக்கலாம். சதுர்த்தி, சஷ்டி, அஷ்டமி, நவமி, சிவராத்திரி, திவசம் போன்றவைகளுக்கு விதிகள் மாறுபடுகின்றன.*

***சதுர்த்தி:-*** *சதுர்த்தி திதியானது சூரிய உதயத்துக்கும் சூரிய அஸ்தமனத்துக்கும் இடையேயான நேரத்தின் 8/15 காலப் பகுதியில் இருக்க வேண்டும்.*

***சங்கடகரசதுர்த்தி:-*** *சதுர்த்தித் திதியானது சந்திர உதயத்தின் போது இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் சூரிய உதயத்தில் இருக்கும் நாளை எடுத்துக் கொள்ளலாம்.*

***சிவராத்திரி****:-* *சதுர்த்தசி திதியானது சூரிய அஸ்தமனத்துக்கும் சூரிய உதயத்துக்கும் (நள்இரவு) இடையேயான நேரத்தின் 8/15 காலப் பகுதியில் இருக்க வேண்டும். தொடர்ச்சியாக இரண்டு நள்இரவு சதுர்த்தசி நின்றால், சதுர்த்தசி தொடங்கும் இரவு சிவராத்திரி அனுஷ்டிக்க வேண்டும். தொடர்சியாக இரண்டு நாட்களும் நள்இரவில் சதுர்த்தசி இல்லாவிட்டால் சதுர்த்தசி முடியும் இரவு சிவராத்திரி அனுஷ்டிக்க வேண்டும்.*

***அமாவாசை, பூரணை, திவசம்:-*** *திதியானது சூரிய உதயத்துக்கும் சூரிய அஸ்த மனத்துக்கும் இடையேயான நேரத்தின் 4/5 காலப் பகுதியில் இருக்க வேண்டும்.*

***ஏகாதசி:-*** *ஏகாதசி திதியானது, சூரிய உதயத்திற்கு முன் குறைந்தது 2 முஹுர்த்தம் முன்பாக தொடங்க வேண்டும். இது பிரம்மமுஹுர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. ஏகாதசி திதியானது, பிரம்மமுஹுர்த்தம் தொடங்கிய பின் ஆரம்பித்தால் மறு நாள் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்க படல் வேண்டும்.*

# 4
# ஏனைய செய்திக்குறிப்புகள்





## கோவிலுக்கு பழங்கள் வழங்கப்படுவது ஏன்?

***This article is extracted from:***
***Gods to Godhead, by MK.Angajan, 2010.***

*Fruit represents your personality. The fruit is a product of a tree and the seed inside the fruit is a producer of future trees. Fruit is the effect of a tree and is the cause of future trees. Similarly, you are a product of the past and producer of the future at the same time. Your present individuality is a product of your past thoughts, desires and actions. And the type of thoughts, desires and actions you perform from now on creates your future. Your life is the fruit of past actions and seed of future actions. Effect and cause coincides in the fruit. Similarly, you are an effect and cause at the same time, effect of the past and cause of the future. Although, your past activities are the cause of your present individuality, your self-effort now can create your future identity. The fruit thus, represents the fruit of your past activities. The seed represents the self-effort or choice of action to create your life in the future.*



## கோயிலில் தேங்காய் உடைப்பது ஏன்?

*Coconut is the most common fruit offered to the shirine at the temple. There are many reasons:*



*1. The coconut is a symbol of selfless service and sacrifice. The structure and composition of coconut also conveys a deeper meaning. Its structure is closely similar to the human personality. The coconut has the outer cover that is smooth and shiny. Under the smooth surface is the fibrous coir that is entwined, tangled and knotted. Beyond the matted and tangled coir is the hard shell of the coconut protecting the white kernel. In the kernel there is the sweet water. At the front end of the coconut there are the three eyes of coconut. When devotees take a coconut to the temple they remove the outer cover together with the coir, leaving the hard shell and a tuft that is covering the three eyes. The priest in a temple removes the tuft of the coconut during the ritual and exposes the three eyes; and finally breaks the coconut and reveals the kernel.*

*2. A coconut symbolizes the human personality. Humans have three layers of personality known as three bodies namely: the gross body, subtle body and causal body. Gross body is the physical body composed of the ten sense organs. Subtle body comprises of the mind, intellect and ego with its numerous thoughts, desires, attachments and emotions. The causal body is the root of your personality, which is comprised of your vasanas (personal characteristics). The smooth outer surface of the coconut represents the gross body, the outer personality. The fibrous coir represents the subtle body with its numerous desires, emotions and attachments. The entwined, tangled and knotted coir represents the desires and attachments. The hard shell symbolizes the casual body vasanas, which is hard to crack. Beyond the gross body, subtle body and causal body is the Atman, the God principle, the supreme bliss. The white kernel of the coconut represents the Atman and the nectarine juice indicates the bliss of Godhead. Just as you need to go beyond the cover, coir and shell to reach the nectarine juice, you need to transcend gross, subtle and casual bodies to reach the Self within.*

*3. Taking a coconut to the temple, after removing all the coir leaving only a tuft, is symbolic that you eradicated all the desires and worldly attachments. The small tuft left at front end represents the desires that are essential and conducive for spiritual development. The priest removes the tuft and exposes the three eyes, breaks the shell and reveals the white kernel.*

*4. The three eyes represent the two physical eyes and the third eye is the gnana chakshu- the eye of wisdom. Revealing the eyes of a coconut represents opening of the third eye, often referred to in the spiritual phraseology as gnana*

*chakshu. It is the inner eye by which you see the world as an expression of God. Removing the tuft symbolizes eradication of the last traces of thoughts, desires and vasanas. Breaking the shell and exposing the kernel indicates finally transcending the third hurdle that is the casual body and revealing the Divinity within. Thoughts and desires veil Divinity within. When man eradicates the entire thoughts and desires, Divinity reveals itself.*

## வாழை இலை பயன்படுத்தும் முறை



- கும்பம் வைக்கும் போது தலை நுனிப்பக்கம் எப்போதும் கிழக்கு அல்லது வடக்குத் திசையாக அமைத்துக் கும்பம் வைக்க வேண்டும்.
- சாப்பிடும்போது தலை நுனி இடக்கைப் பக்கமாக இருத்தல் வேண்டும்.
- அபரக் கிரியைகளுக்கு வாழை இலையின் தலை நுனி தெற்குப் பக்கமாகப் போடப்படவேண்டும்.

## பஞ்சாமிர்தம்





பஞ்சாமிர்தம் என்பது பழம், தேன், நெய், தயிர், வெல்லம் என்னும் ஐந்தும் சேர்ந்ததுவாகும்.

*https://www.vidhyashomecooking.com/panchamirtham-panchamrutham-panchamritham/*

## சைவ உணவின் மகத்துவம்

*The Stamina of a Camel*
*The Strength of an Elephant*
*And the Beauty of a Horse*
*Are all sustained on a Vegetarian Diet.*




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Moolasthanam | 8 | Maga Laksmi | 16 | Office | 24 | Toilet - Female |
| 2 | Arththa Mandapam | 9 | Murugan | 17 | Main Entrance Gate | 25 | Existing Tube Well |
| 3 | Maha Mandapam | 10 | Vairavar | 18 | Site Entrance Gate | 26 | Elevated Water Tank |
| 4 | Eluntharuli | 11 | Navakiragam | 19 | External Kitchen | 27 | Washing Bay |
| 5 | Tharisana Mandapam | 12 | Vasantha Mandapam | 20 | Assembly Hall | | |
| 6 | Thampa Mandapam | 13 | Yagasalai | 21 | Changing Room - Male | | |
| 6a | Palipedam | 14 | Mani Kopuram | 22 | Changing Room - Female | | |
| 7 | Raja Kopuram | 15 | Madapalli | 23 | Toilet - Male | | |

PROJECT : CONSTRUCTION OF THE SHRI SITHIVINAYAKAR TEMPLE FOR UNIVERSITY OF JAFFNA KILINOCHCHI PREMISES

DRAWING TITLE : MASTER PLAN

DRAWING NO : 01 | REV: 00 | DATE: 02/12/2021

# 5
# ஆலய கணக்கறிக்கைகள்



# *Financial Support to Temple Construction*

**அட்டவணை 1: நிதி பங்களிப்பு செய்த அடியவர்கள் பெயர் விபரம்**

| No | Name | Amount |
|---|---|---:|
| 01 | Vice Chancellor | 100,000.00 |
| 02 | Main campus | 110,000.00 |
| 03 | Engineering Staff | 610,750.00 |
| 04 | Engineering Students | 30,000.00 |
| 05 | Agriculture Staff | 1,050,500.00 |
| 06 | Agriculture Students | 58,000.00 |
| 07 | Technology Staff | 574,000.00 |
| 08 | Technology Students | 42,000.00 |
| 09 | Graduates from Kilinochchi Premises | 108,030.00 |
| 10 | Well-wishers | 2,683,280.00 |
| 11 | Eng. A. Kanthavel | 1,600,000.00 |
| 12 | Eng. Ganeshan Yogeeswaran | 81,000.00 |
| 13 | Eng. Jeevanandam Puvirajan, | 32,400.00 |
| 14 | Eng. Jude Rosanth Nadarajah, | 16,200.00 |
| 15 | Eng. Navaratnam Thevaranjan, | 113,400.00 |
| 16 | Eng. Ponniah Nanthagopan, | 16,200.00 |
| 17 | Eng. Sithamparapillai Sabesan , | 105,300.00 |
| 18 | Eng. Sivayogeswaran Sutharsanan, | 32,400.00 |
| 19 | Eng. Tharmsirirajah Dharmasurendranath , | 81,000.00 |
| 20 | Eng. Theiventhiram Gnanakumaran , | 24,300.00 |
| 21 | Eng. Thiyakaraja Sivarupan | 40,500.00 |
| 22 | Eng. Ragavan Aiyadurai<br>Eng. Jeyaruby Ragavan | 117,598.00 |
| 23 | Eng. M. Ramathas | 200,000.00 |
| 24 | Mr. Rajah Manoharan | 50,000.00 |
| 25 | A donor from Singapore sponsoring Vairavar Koyil (1st payment) | 500,000.00 |
| 26 | Eng. Mayoorathan | 100,000.00 |
| 27 | A donor from Singapore sponsoring Vairavar Koyil (2nd payment) | 500,000.00 |
| 28 | Kapilan Kirpairajah, Firend of Rajah Manoharan | 30,000.00 |
| 29 | "Graduates working in Singapore" for "Mahaluxmi temple" | 2,601,165.00 |
| 30 | Dr Ponnudurai Kuperan | 334,000.00 |
| 31 | Satchithanantham Gobinath | 100,367.00 |
| 32 | Balasingam Shanmugathaasan | 167,000.00 |
| 33 | Mr & Mrs Thirunavukkarasu Thayanthan | 167,000.00 |
| 34 | Kapilan Sivathadchanamoorthy | 41,750.00 |
| 35 | Mahalingam Katheeskumar | 83,500.00 |
| 36 | Gunaraja Pirinthan | 83,500.00 |
| 37 | Ganeshathurai Theeban | 16,700.00 |
| 38 | Ramanathan Thaneshan | 8,350.00 |
| 39 | Kirubananthan Gowrezan | 83,500.00 |
| 40 | Kumarasamy Surenthiran | 108,550.00 |
| 41 | Dr Vinayagam Thamaraikkannan | 334,000.00 |
| 42 | Thayaparan Sivasubramaniam | 167,000.00 |
| 43 | Jeyakanth Sivabalasingam | 16,700.00 |
| 44 | Kulendran Manivannan | 8,350.00 |
| 45 | Vamadevan Lingeshan | 16,700.00 |

| | | |
|---|---|---|
| 46 | Sadacharam Artputhanathan | 111,890.00 |
| 47 | Vanniyasingam Sivasajanth | 8,350.00 |
| 48 | Subramaniyam Arasaratnam | 16,700.00 |
| 49 | Thuvarahan Thirilogaiswera | 33,400.00 |
| 50 | Sivaharan Sigamany | 25,050.00 |
| 51 | Sothinathan Kabilan | 16,700.00 |
| 52 | Umakanthan Mahendran | 100,701.00 |
| 53 | Jeyarasan Krishnapillai | 83,500.00 |
| 54 | Sivarasa Balasingam | 16,700.00 |
| 55 | Jothukanna Sinnakknu | 8,350.00 |
| 56 | Sangarappillai Thayalan | 83,500.00 |
| 57 | Suthakaran Skantheswaran | 33,567.00 |
| 58 | Arumugam Sri Ganeshanantha | 83,500.00 |
| 59 | Nanthakumar Kopalakrishnan | 33,400.00 |
| 60 | Gnnaharan Saravanapavanathan | 50,100.00 |
| 61 | Loganathan Nishanthan | 33,400.00 |
| 62 | Kumarasamy Yathunanthan | 16,700.00 |
| 63 | Sivakumaru Kandasamy | 16,700.00 |
| 64 | Swaminathan Prashanthan | 16,700.00 |
| 65 | Rajah Rajsuthan | 8,350.00 |
| 66 | Singarayar Cleetruse Geethan | 16,700.00 |
| 67 | Shanmugalingam Gengatharan | 16,700.00 |
| 68 | Nallathambi Kumanan | 16,700.00 |
| 69 | Jeyachandran Mugunthan | 16,700.00 |
| 70 | Eng. Sellathamby Selvaruban, E89- Peradeniya (through Kiriparan) | 200,000.00 |
| 71 | Mr. Arulselvam, Melbourne (through Manoharan) | 15,000.00 |
| 72 | Balasingham Bageswaran | 25,275.00 |
| 73 | Janarthanan Ponnurajah | 16,850.00 |
| 74 | Jegatheesan Piratheepan | 33,700.00 |
| 75 | Katpakanathan Kamalachandran | 50,550.00 |
| 76 | Kathiresu Ramathas | 33,700.00 |
| 77 | Sampasivam Sivathasan | 33,700.00 |
| 78 | Thevaraj Surendran | 25,275.00 |
| 79 | Thiruloganathan Sanjeevan | 33,700.00 |
| 80 | VASEEHARAN THURAIAPPAH | 175,000.00 |
| | JEYANANTHAN PONNUSAMY | |
| | KIRITHARAN THURAIAPPAH | |
| | THIRUNAVUKKARASU GANGATHARAN | |
| | THINESH SATCUNANANTHARAJAH | |
| | SUREN THAMBIPILLAI | |
| | SRIRAMANAN RAMACHANDRAN | |
| | SUTHA SIVASHANMUGAM | |
| | GOWRITHARAN KANDASAMY | |
| | NANATHKUMARAN SIVAPIRAGASAM | |
| 81 | Dr. Sivanathan Arunan | 100,000.00 |
| 82 | Dr. Sivanathan Aparajithan | 50,000.00 |
| 83 | Parthasarathi Pranavan, Well Wisher from India (Kiriparan) | 24,000.00 |
| 84 | Santhiramohan Theshoban, Peradeniya, E 08 Graduate (Kiriparan) | 15,000.00 |
| 85 | S.K. Nathan (Kilinochchi service person) | 500,000.00 |
| 86 | Param | 52,032.18 |
| 87 | Krishnamenon | 41,624.94 |

| | | |
|---|---|---|
| 88 | Niranjanan | 41,624.94 |
| 89 | Maheswaran | 20,812.47 |
| 90 | Ahila | 20,812.47 |
| 91 | Saiskandan | 75,714.30 |
| 92 | Santhakumar | 37,857.10 |
| 93 | Balasubmramaniam | 37,857.10 |
| 94 | Arambu | 37,857.10 |
| 95 | Arunachalam | 18,928.60 |
| 96 | Kulanathan | 18,928.60 |
| 97 | Jegathjayan | 37,857.10 |
| 98 | E/04/Graduates (Coordinated by Eng. Gugarupan and Eng Thanush, through Kiriparan) | 300,000.00 |
| 99 | Eng. (Dr.) M. Roobavannan | 75,000.00 |
| 100 | S. Jeyakandan | 7,000.00 |
| 101 | A. Atputharajah | 30,000.00 |
| 102 | Haritharan | 50,000.00 |
| 103 | Jeganandan | 10,000.00 |
| 104 | V. Gajendran | 5,000.00 |
| 105 | Manoharan | 5,000.00 |
| 106 | Rajamohan | 5,000.00 |
| 107 | Manivannan | 15,000.00 |
| 108 | Mangaleswaran | 5,000.00 |
| 109 | Devananthan | 5,000.00 |
| 110 | Karunakaran | 10,000.00 |
| 111 | A. Archunarajan | 25,000.00 |
| 112 | K. Sivanesan | 25,000.00 |
| 113 | Annalingam Sutha | 8,000.00 |
| 114 | M. Pathmachuthan | 5,000.00 |
| 115 | L. Parthipan | 15,250.00 |
| 116 | S. Athavan | 61,000.00 |
| 117 | P. Anphalahan | 76,250.00 |
| 118 | S. Premakantha | 76,250.00 |
| 119 | T. Darmendra | 76,250.00 |
| 120 | N. Surendran | 76,250.00 |
| 121 | S. Sabesan | 30,500.00 |
| 122 | S. Senthuran | 30,500.00 |
| 123 | Donor with the help of Pathmanaban Iya | 500,000.00 |
| 124 | Wellwishers | 977,098.14 |
| Total by January 2023 | | 18,487,053.04 |

# அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் திருப்பணி செலவுகள் விபரம்

***அட்டவணை 2: கோவில் கட்டுமான செலவு விபரம்***

| **பணிகள் விபரம்** | **2021ம் ஆண்டின் நடுப்பகுதியில் நிதி திரட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு** | **2022ம் ஆண்டின் நடுப்பகுதியில் நிதி திரட்டுவதற்காக மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு** | **கட்டுமானத்திற்கு செலவிடப்பட்ட உண்மையான தொகை** |
|---|---:|---:|---:|
| கருவறை | *3,685,000.00* | *4,125,000.00* | *4,450,000.00* |
| அர்த்தமண்டபம் | *1,200,000.00* | *1,200,000.00* | *1,200,000.00* |
| மஹாமண்டபம் | *5,500,000.00* | *7,000,000.00* | *7,350,000.00* |
| ஸ்ரீ சுப்ரமணியர் ஆலயம் | *1,600,000.00* | *1,600,000.00* | *1,600,000.00* |
| ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஆலயம் | *1,600,000.00* | *1,600,000.00* | *1,600,000.00* |
| ஸ்ரீ வைரவர் ஆலயம் | *1,000,000.00* | *1,000,000.00* | *1,000,000.00* |
| மடப்பள்ளி | *500,000.00* | *600,000.00* | *600,000.00* |
| அலுவலகம் | *500,000.00* | *600,000.00* | *600,000.00* |
| ஏனைய வேலைகள் | *.** | *1,000,000.00* | *1,001,822.00* |
| **மொத்தச் செலவு** | ***15,585,000.00*** | ***18,725,000.00*** | ***19,401,822.00*** |

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

*எமது ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் உருவாவதற்கு காரணமாக இருந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். ஆலய கட்டுமானத்துக்கு பணம், பொருள் கொடுத்து உதவிய அடியவர்களுக்கும், பொறியியற்பீட முன்னைநாள் பீடாதிபதி பேராசிரியர் அ.அற்புதராஜா, தற்போதைய பீடாதிபதி கலாநிதி க. பிரபாகரன், விரிவுரையாளர் திரு பா. கிரிபரன் ஆகியோரின் இடைவிடாத முயற்சிக்கும் பங்களிப்புக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகள். அத்துடன், ஆலய திருப்பணியினை திறம்பட செயற்படுத்திய ஸ்தபதிகள் திரு. இளையராஜா, திரு. புருஷோத்தமன் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகள்.*

*ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர், மலர்ந்து மலராவதற்கு காரணமாக இருந்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை காணிக்கையாக்குகின்றோம். ஆசியுரைகள், கட்டுரைகள் தந்துதவிய குருமார்கள், பெரியவர்கள், அடியவர்கள் அனைவருக்கும் எமது சிரம் தாழ்ந்த நன்றிகள்.*

*கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து தொண்டர்களுக்கும் கிரியைகளை சிறப்புற நடாத்திய குருமார்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து, எல்லாம் வல்ல ஸ்ரீ சித்திவிநாயக பெருமானின் தாள் பணிகின்றோம்.*

*ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்*
*யாழ்ப்பாண பல்கலைக்கழகம்*
*அறிவியல் நகர், கிளிநொச்சி.*
*20 பெப்ரவரி 2023*